அறைவு 02 இயம் 28 February 22 - 28, 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

# MALAIMURASU

விலை : 30.00 பக்கங்கள் : 16 Registered as a newspaper in Sri Lanka பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்

## தேன்நிலவிற்கு மாலைதீவு

உலகின் மிகச் சிறந்த தேன்நிலவைக் கழிக்கும் இடமாக மாலைதீவை மக்கள் தேர்ந்துள்ளனர்.



## புதைகுழியில் முதலாவது தடயம் மீட்பு

திருக்கேதீஸ்வர மனிதப் புதைகுழி கடந்த 18ம் திகதி தோண்டப்பட்ட போது அப் புதைகுழியிலிருந்து சங்கிலியொன்றின் பென்ரனை ஒத்த பொருள் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அது பென்ரனாக இருக்கும் பட்சத்தில் கொல்லப்பட்டவர் யார் என்பதை அப் பென்ரனை உரிமை கோருபவர்களை வைத்துக் கண்டு கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. 13



## ஊடக சுதந்திரம் கேள்விக்குறியாகியுள்ளது

### - திருமலை ஊடக சங்கத் தலைவர் வடமலை ராஜ்குமார் -

“மக்ஹெய்ஸர் விளையாட்டுத் திடலில் காணப்பட்டதாகக் கூறப்படும் கொலைப்புதைகுழி தொடர்பாகத் தகவல் சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களை தடுத்தமையானது ஊடக சுதந்திரம் தொடர்பான கேள்வியை நம்மத்தியில் ஏற்படுத்தியுள்ளது” என திருகோணமலை ஊடகவியலாளர் சங்கத்தின் புதிய தலைவர் வடமலை ராஜ்குமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.

கடந்த 15ம் திகதி விகாரை வீதியில் உள்ள 13

# “சாவதைத் தவிர வேறு வழியில்லை”




## கட்டுவலைக்குச் சம்பூரில் தடை


### முதலமைச்சரின் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை

### பிரதிஅமைச்சருக்கும் மீன்பிடி அமைச்சருக்கும் நிலைமை தெரியும்

உரிய காரணங்கள் எதுவுமே தெரிவிக்காமல் எம்மை மீன்பிடிக்கத் தடை விதித்துள்ளார்கள். மீன்பிடி மட்டுமே எமது சீவனோபாயத் தொழிலாக இருக்கின்றது. அதனையும் தடுத்தால் நாமும் எமது குழந்தை குட்டிகளும் சாவதைத் தவிர வேறு வழியில்லை என சம்பூர் தமிழ் மீனவர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்துள்ளனர்.

கடலில் கட்டுவலை மூலம் மீன்பிடித்து வந்த சம்பூர் முகாமில் உள்ள மீனவ மக்களுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் இம்மக்களைத் தொடர்பு கொண்ட பிரதேசத்திற்குப் பொறுப்பான கடற்படை அதிகாரி காரணம் எதுவும் கூறாமல் குறித்த கடற் பகுதியில் மீன் பிடி நடவடிக்கைகளை நிறுத்துமாறு தெரிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து இத் தடையை கிழக்கின் முதலமைச்சர்,...... 13



## தமிழரின் பிரச்சனைக்குத் தீர்வு நெருங்கிவிட்டது

சற்றே பொறுத்திருங்கள், தமிழர்களின் பிரச்சனைக்கான தீர்வு கிடைக்கும் காலம் மிக நெருங்கி வந்துவிட்டது. அதன் பின்னர் எங்களின் பிரதேசங்களை நாமே அபிவிருத்தி செய்வோம்” என திருகோணமலை, தம்பலகாமத்தில் மக்களைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்தறிவிக்கையில் “ ஜெனீவாவில் அமெரிக்கத் தீர்மானம் முன்னெப்போதும் இல்லாதவாறு கடுமையாகவே இருக்கும் என்பதுடன் அத் தீர்மானம் பெரு வெற்றியும் அளிக்கும். அதனை எதிர்கொள்ளப் போவதாக உள்நாட்டில் இலங்கை தெரிவித்தாலும் அதனைத் தவிர்க்கவே உண்மையில் அரசு முயன்றிருக்கின்றது” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான நிலையில் அரசிடம் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யுமாறு கேட்டால் அரசு கொட்டிக் கொடுக்கத் தயாராக உள்ளது. ஆனால் அவ்வாறு பிச்சை கேட்டு எமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை எமக்கில்லை. ஆகவே தான் சிறிது பொருத்திருங்கள். உரிய தீர்வின் பின் அனைத்துப் பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்ய முடியும்” என அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு வருகை தர நாம் நிபந்தனை விதிப்பதாகத் தெரிவிப்பது தவறானது. நாம் கேட்பதெல்லாம் ஏற்கனவே பேசி இணங்கிக்கொள்ளப்பட்ட விடயங்களை செயல்படுத்துங்கள் என்பதே என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புதைகுழியின் எலும்புகள் கொழும்பிற்கு



திருகோணமலைப் புதைகுழியில் இருந்து மீட்டெடுக்கப்பட்ட எச்சங்கள் மருத்துவ பரிசோதனைக்காக கொழும்பிலுள்ள சட்ட வைத்திய அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் திருகோணமலை மக்ஹெய்ஸர் விளையாட்டுத் திடலில் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளத் தோண்டப்பட்ட குழியொன்றில் இருந்து எச்சங்கள் வெளியாகத் தொடங்கியதை அடுத்து அப்பிரதேசம் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அப்புதைகுழிப் பிரதேசத்திற்கு வருகை தந்த சட்ட வைத்திய அதிகாரியும், நீதிபதியும் சுமார் பதினைந்த எலும்பு எச்சங்களை மீட்டனர்.

அவ்வெலும்பு எச்சங்களை கொழும்பின் சட்டவைத்திய அதிகாரிக்கு அனுப்பி வைக்குமாறு பணித்த நீதிபதி அவ்வெச்சங்கள் மனித எச்சங்களா என்பது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கட்டளையிட்டுள்ளார். அவ்வறிக்கையின் அடிப்படையில் காவல்துறை விசாரணைகளை முன்னெடுக்கும் எனத் தெரிகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு
MALAIMURASU

இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை


malaimurasu@hotmail.com 075-4252042

## வயிற்றில் பசியிருக்குமானால் இணக்கம் எவ்வாறு வரும்?

மனிதனின் அடிப்படைத் தேவைகள் எவை என்ற பேச்செழும் போதே முதலில் பேசப்படுவது உணவு தான்....

ஏனெனில் மனித வாழ்வு என்பது மிக முக்கியமாக தனது வயிற்றை நிரப்பிய பின்னரே, அது கால்வயிறாகவோ, அல்லது அரைவயிறாகவோ, இருந்தாலும் கூட நிரப்பிய பின்னரே அடுத்த கட்டத்தை நோக்கிச் சிந்திப்பதைத் தான் வழமையாகக் கொள்கின்றது.

குறைத்து உண்பவர்கள் நாளாந்தம் தமது பசியை உணர்வதால் மற்றவனின் பசி எவ்வாறு இருக்கும் என்பதை உணர்ந்து கொண்டே இருப்பார்கள். அதனால் பகிர்ந்து உண்டு வாழ்வதைப் பழக்கமாக்கிக் கொள்வார்கள். அதனால் அவர்கள் ஞானிகளாக மாறிவிடுகின்றனர்.

அளவாக உண்பவன் மனிதனாக இருப்பான். தனது வயிறு முழுவதுமாக நிரம்பிய பின்னர் எஞ்சியதைப் பங்கிட விரும்புவான்.

அரக்கனோ அளவிற்கு அதிகமாக உண்டு ஏப்பம் விடுபவனாகவே இருப்பான். பகிர்தல் என்று வரும் போது போருக்குச் செல்லும் பண்புடன் அவன் இருப்பான்.

தனது வயிற்றைப் பசியில் காயவிட்டு தனது குழந்தைகளின் வயிற்றை நிரப்பப் பாடுபடும் அனைவரும் தேவ தேவியரே....

எனில் கடவுள் யார்? மற்றவருக்காக உணவை தவிர்த்து உயிரைத் துறக்கும் தற்கொடையாளிகளே!

இங்கு நாம் பேச வந்த விடயம் யாதெனில் பசியும் உணவும் வாழ்விற் பிரிக்க முடியாத அங்கமாகி விடுகின்றன.

அப் பசியைப் போக்கப் பாடுபடும் மக்களின் வாழ்வாதாரத்தைச் சிறுகச் சிறுகச் சிதைத்து அவர்களை அகதி முகாம்களில் வாடவிட்டு நல்லிணக்கத்தை பற்றிப் பேசுவது எவ்வகையில் சாத்தியப்படும்.

சம்பூர் மக்கள் தமது நிலத்தை இழந்து பல ஆண்டுகள் கடந்துள்ளன. அபிவிருத்தி என்ற பெயரால் நிகழும் ஆக்கிரமிப்புக்களை தவிர்க்க முடியாது, பார்வையாளர்களாக அம் மண்ணின் மக்கள் வாழ்க்கையை முன் நகர்த்தி வருகின்றார்கள்.

அம் முன்னகர்வுக்கு அவர்கள் செய்யும் தொழில் ஆதாரமாக இருக்கின்றது. அத் தொழிலையும் தடை செய்ய முயற்சிப்பது எவ்வாறு நல்லிணக்கத்தை அம் மக்களுக்குக் கொடுக்கும்?

கட்டுவலைத் தொழிலைத் தடை செய்தால் அவர்களின் மாற்று வருமானம் என்ன? ஏதாவது செய்து பிழைத்துக் கொள்ளட்டும் என்பது எந்தளவிற்குச் சாத்தியம்?

அம் மக்களில் ஒருவர் சொன்ன சொற்கள் "பிறந்த நாளில் இருந்து செய்யிற தொழில் இதுதானய்யா... இத விட்டா நானும் பெண்டிரும் பிள்ளையும் சாகத்தான் ஐயா வேணும்... எனக்கு வேற வேலை ஒண்டும் தெரியாதே" என்ற அவருக்கு வயது 45ற்கு மேல் இருக்கும் இந்த வயிதில் புதிய தொழிலைக் கற்றுக்கொள்வதும் புதிய தொழிலைப் புரிவதும் எவ்வளவு சாத்தியம்?

நல்லிணக்கம் என்பது எங்கிருந்து பூக்க வேண்டும்?.. அது வெள்ளையுடை தரித்த இரண்டு அரசியல் வாதிகளின் வார்த்தைகளின் மூலம் எப்போதுமே மலரப் போவதில்லை.... பசியற்ற பாமரனின் வீட்டிற்கு எப்போது வேற்றினத் தான் தேனீர் அருந்த வருகின்றானோ அன்றே நல்லிணக்கம் துளிர்விடத் தொடங்கி விடும். இதனை உரியவர்கள் புரிந்துகொள்வார்களா?

## நரிகளுக்கு இரையானாரா முதியவர்?

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் காணாமல்போனதாக தெரிவிக்கப்பட்ட வயோதிபரின் சடலமொன்றினை நரிகள் உண்ட நிலையில் தாம் மீட்டுள்ளதாக வாகரை பொலிசார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கட்டுமுறிவு குளத்தின் காட்டுப்பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அம்பந்தனாவெளி கதிரவெளியைச் சேர்ந்த வைரமுத்து இளையதம்பி வயது(65) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

வயோதிபர் வயல் வேலைக்காக குறித்த பிரதேசத்திற்கு சென்றதாகவும் நீண்ட நாட்கள் ஆகியும் வீடு திரும்பாமையினால் உறவினர்களால் வாகரைக் காவல்துறையில் இடப்பட்ட முறைப்பாட்டை அடுத்து மேற்கொள்ளப்பட்ட ஐந்து நாட் தேடுதலில் வயோதிபரின் சடலம் காட்டுக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இச்சடலத்தின் மீது காயங்கள் காணப்படுவதாகவும் இவை காட்டில் வாழும் விலங்குகளினால் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் எனவும் காவல்துறை சந்தேகம் வெளியிட்டுள்ளது.

## கடமையில் இருந்தபோது களவு



மட்டக்களப்பில் கடமையாற்றிய காலப் பகுதியில் சிப்பாய் ஒருவர் களவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

குறித்த சிப்பாய் தான் களவு எடுத்த பொருட்களை விற்க முற்பட்ட போதே அவர் கைதாகியுள்ளார். கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு பெய்லி வீதியில் உள்ள சிங்கள மகாவித்தியாலயத்துக்கு முன்பாகவுள்ள வீட்டின் குளியலறை ஜன்னல் ஊடாக புகுந்த கொள்ளையரால் வீட்டில் இருந்த ஐந்து இலட்சம் பெறுமதியான பொருட்கள் மற்றும் பணம் கொள்ளையிடப்பட்டன.

இது தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தின் குற்றப் புலனாய்வுத் துறையினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுவந்தனர்.

இவர் இந்த ஆண்டு ஜனவரி மாதம் அனுராதபுரத்தில் உள்ள எப்பலாவெளி பகுதிக்கு மாற்றலாகிச்சென்ற நிலையில் இதுதொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டுவந்தது. இந்த நிலையில் இவர் தம்புள்ள பகுதியில் கொள்ளையிடப்பட்ட பொருட்களை விற்பனைசெய்த, அடகுவைத்தது தொடர்பிலான தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

இதனைத் தொடர்ந்து தம்புள்ள, சீகிரியா பகுதியில் வைத்து குறித்த இராணுவ வீரர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவரினால் விற்கப்பட்ட மற்றும் அடகு வைக்கப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன. விசாரணை

## முழுக்கவசத்திற்கு மீண்டும் தடை ?



முழு முத்தையும் மறைக்கும் தலைக்கவசத்தினை (ஹெல்மட்) தடைசெய்வதற்கான சட்டத் தேவை எழுந்துள்ளதாக காவல்துறை ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

முழு முகத்தையும் மூடி மறைக்கும் வகையிலான தலைக்கவசத்தினை அணிந்து சென்ற ஆயுததாரிகளால், நீர்கொழும்பில் நகைக்கடை மற்றும் நாணய பரிவர்த்தனை நிலையத்தில் 20 மில்லியன் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பணம் கொள்ளையடிக்கப்பட்டதை தொடர்ந்து இந்த வகையான தலைக்கவசங்களை அணிவதை தடைசெய்வதற்கான சட்டத் தேவை எழுந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய மாநாட்டுக்கு முன்னர் கொண்டுவரப்பட்ட முகத்தை மறைக்கும் வகையிலான தலைக்கவசங்களை அணியும் உடனேயே நீக்கப்பட்டது என்றும் அவர் சொன்னார்.

சர்வதேசச் செய்திகள்

## "உள்ளாடைச் சுதந்திரம்" வழங்குக



பருத்தியாலான உள்ளாடைகளை மட்டுமே நாட்டுக்குள் இறக்குமதி செய்ய வேண்டும் என்ற சட்டத்தை எதிர்த்து பெண்கள் தமது "உள்ளாடைகளுக்குச் சுதந்திரம் வழங்குக" என்ற கோசத்துடன் ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தியுள்ளனர்.

ரஸ்யா, பெலாரஸ் மற்றும் கஸாக்கிஸ்த்தான் நாடுகளில் ஆகக் குறைந்தது ஆறு வீதமாவது பருத்தி கலக்கப் பட்ட உள்ளாடைகளையே பெண்கள் அணிய வேண்டும் என்ற வர்த்தகக் கட்டுப்பாடு அறிவிக்கப்பட்டதை அடுத்து கஸாக்கிஸ்தானில் கூடிய பெண்களே சுதந்திரப் போராட்டத்தை நடாத்தியுள்ளனர். இப் போராட்டத்தில் உள்ளாடைகளைக் கையில் அணிந்தபடி போராடிய பெண்கள் சுமார் 30 பேர் வரை காவல்துறையினரால் கைதாகி உள்ளனர்.

## அமெரிக்கர் மீதே குண்டு வீசிய அமெரிக்க விமானம்

ஆப்கான் மலைப் பகுதிகளில் நிலைகொண்டிருந்த அமெரிக்கப் படைகளின் மீது அமெரிக்க யுத்த விமானம் ஒன்று 500 றாத்தல் எடைகொண்ட குண்டொன்றை வீசியுள்ளது.

இக் குண்டு வீச்சால் உயிர்ச் சேதம் எவையும் நிகழவில்லை. தலிபான்கள் நிலைகொண்டிருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து அவர்களைத் தாக்க விரைந்த விமானமே குறித்த அமெரிக்க படைநிலையைக் கடக்கும் போது தவறுதலாக அப் படைநிலையையே தாக்க தனக்குப் பணிக்கப்பட்டிருப்பதாகக் கருதி குண்டை விடுவித்துள்ளது.

தலைக்கு மேல் வேகமாகப் பறந்த தமது விமானத்தில் இருந்து குண்டு கழற்றிவிடப்படும் சத்தத்தைக் கேட்ட இராணுவ வீரர்கள் செய்வதறியாது திகைத்துள்ளனர். எனினும் உடனடியாகவே பாதுகாப்புப் பதுங்குகுழிகளுக்குள் சென்று விட்டதால் உயிராபத்துக்கள் தவிர்க்கபட்டிருப்பதாக தெரிகின்றது.

## சந்திவெளி வைத்தியசாலைக்கு சந்திரகாந்தன் வருகை

(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)

மட்டக்களப்பு சந்திவெளி பிரதேச வைத்தியசாலைக்கு அண்மையில் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான சி.சந்திரகாந்தன் மக்களின் வேண்டுகோளினை ஏற்று திடீர் விஜயமொன்றினை மேற்கொண்டார்.

மிக நீண்ட தொன்மை கொண்ட இவ் வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பாகவும் ஆளணி நியமனம் தொடர்பாகவும் இங்கு ஆராயப் பட்டது.

இவ் விஜயத்தின் போது மாவட்ட சுகாதாரபணிப்பாளர் சதுர்முகம் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பூ.பிரசாந்தன் உள்ளிட்ட குழுவினரும் கலந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலப் பத்திரிகைகள் மீதான பார்வை

## விமானப் பராமரிப்பிற்கு மத்தளைக்குச் செல்க

தற்பொது வரை கட்டுனாயக்கா விமான தளத்தில் இயங்கி வந்த விமானப் பராமரிப்புப் பிரிவானது மத்தள விமான நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக வான்பறப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந் நடவடிக்கை ஊடாக மத்தள விமான நிலையத்தை இயங்கு நிலைக்குத் தள்ள முடியும் என தெரிவித்துள்ள அவர் சரக்கு விமானங்களை மத்தள விமான நிலையத்தில் தரையிறங்கும் முனைப்புக்களில் வான்பறப்பு அமைச்சு கடும் கரிசனையைக் காட்டத் தொடங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

## வதைபடும் புதிய மாணவர்கள்




பல்கலைக்கழகத் திற்குத் தெரிவாகும் புதியவர்களை சிரேட்ட மாணவர்கள் மனிதாபிமானமற்ற முறையில் வதைக்குட்படுத்துவதாக உயர்கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பல்கலைக்கழக மாணவர் பேரவையினரே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் எனவும் முன்னிலை சோசலிசக் கட்சி இளைஞர் அணியென்னும் அரசியல் அமைப்பு தான் பிரபல்யமாவதற்கு இதனை ஒரு நுட்பமாகப் பயன்படுத்துகின்றது எனவும் அம்மூலகங்கள் தெரிவிக்கின்றன. (ஒப்சேவர்)

## ஈரானும் ஆதரவு



இலங்கைக்கெதிராகக் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்திற்கு ஜெனிவாவில் ஈரான் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்படும் என தெரிவித்துள்ளது. (ஒப்சேவர்)

## குற்றவாளிகளை கண்காணிக்கப் புதிய திட்டம்



மரபணுத் தொழில் நுட்பத்தின் அடிப்படையில் குற்றவாளிகளைக் கைது செய்யும் நடைமுறையினை இலங்கையில் "ஜெனி டெக்" ஆய்வு நிறுவனம் முன்னெடுத்துள்ளது. கடந்த 14 வருடங்களில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட சுமார் 3500 குற்றவாளிகளின் மரபணுத் தகவல்கள் கணனி மயப்படுத்தப்பட்டதுடன், வெகு விரைவில் இவ்வெண்ணிக்கையை 10,000 ஆக்க திட்டமிட்டுள்ளதாக ஜெனி டெக் நிறுவன சிரேட்ட விஞ்ஞானி தெரிவித்தார்.

குற்றச் செயல்களைச் செய்பவர்கள் யாதாயினும் ஒரு தடயத்தை விட்டுச் செல்வார்கள். அத்தடயத்தைக் கொண்டு மாதிரிகளை ஆய்வு செய்து குற்றவாளிகளைக் கணித்துக் கொள்வதற்கான ஆய்வு செய்ய இத்திட்டம் உதவி செய்யும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஒப்சேவர்)


## இ.மி.ச எந்திரிகளுக்குப் பயிற்சி பத்தாது

இலங்கையின் நுரைச்சோலை மின்நிலையத்தை இயங்க வைப்பதற்குத் தேவையான பயிற்சிகள் இலங்கை மின்சாரசபை ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என சீன கொந்தராத்துக் காரர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களாகத் தடைப்பட்டிருந்த நுரைச்சோலை மின்நிலையப் பணிகளை வழமைக்குக் கொண்டு வந்துள்ள சீன கொந்தராத்துக்காரர்கள் இத் தகவலை வெளியிட்டுள்ளனர். (லீடர்)

## அபிவிருத்தியை அமெரிக்கா கருத்தில் எடுக்கவில்லை

இலங்கையில் ஏற்பட்டு வரும் கடும் முன்னேற்றங்களை அமெரிக்கா கருத்திற் கொள்ளவில்லை என்பதை அமெரிக்க இராசாங்கப் பிரதிச் செயலாளர் மிஸ்வாலின் வருகையை அடுத்து அமெரிக்கா வெளியிட்டுள்ள கூற்றுக்களிலிருந்து தெளிவாகின்றது என அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (ஒப்சேவர்)



## கலாநிதி காமினி குரே விட்டுச் சென்ற சொத்துக்களின் மதிப்பு 1500 மில்லியன்

காமினி குரே விட்டுச் சென்ற சொத்துக்களின் மொத்த மதிப்பு 1.5 பில்லியன் எனத் தெரியவந்துள்ளது. இலங்கையிலும், சுவிசர்லாந்திலும் உள்ள சொத்துக்களின் மொத்தப் பெறுமதியே இத்தொகையாகும். 2011ம் ஆண்டில் பெறுமதி மதிப்பிட்டதன்படி அசையாச் சொத்துக்கள் 1.2 பில்லியன் ஆகவும், முதலீடுகள் 11 பில்லியன் ஆகவும், வருடாந்தம் 5 மில்லியன் வட்டி வருமானத்தைப் பெறக்கூடிய 67 மில்லியன் நிலையான வைப்புக்களையும், அவரது நடைமுறைக்கணக்கில் 86 மில்லியனையும் கொண்டமைந்துள்ளது. இவ்வாறான சொத்துக்களைக் கொண்ட அவருக்குப் பொறுப்புக்கள் எவையும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. முன்னை நாள் மத்திய வங்கித் துணை ஆளுனராகப் பதவி வகித்த குரே மறைந்த வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் பொருளாதார ஆலோசகராகவும், ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தக மற்றும் அபிவிருத்தி அமைப்பின் செய்லாளர் நாயகமாகவும் செயற்பட்டிருந்தார். இச்சொத்துக்கள் காமினி குரே நிதியத்திற்கே வழங்கப்படும் என்றே தெரிய வருகின்றது. (டைம்ஸ்)

# இலங்கையின் மீது பொருளாதாரத்தடை?

இலங்கையின் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படலாம் என அரசல் புரசலாக கதைகள் கட்டிவிடப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து பொருளாதாரத் தடை குறித்த எச்சரிக்கைகளுக்கு அஞ்சப் போவதில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான அழுத்தங்களின் அடிப்படையில் எந்தவொரு நாடும் பொருளாதாரத் தடை விதித்தால் அதற்காக அடி பணியப் போவதில்லை என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

யுத்த நிறைவின் பின்னர் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை நிலைநாட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் சமாதானம் நிலைநாட்டப் பட்டுள்ளதாகவும், மீளவும் பயங்கரவாதம் தலைதூக்க அனுமதிக்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிநாட்டு அழுத்தங்களுக்காக அடிபணிந்து செயற்பட மாட்டார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு எதிர்நோக்கியுள்ள சவால்களை எதிர்க்க அனைவரும் அணி திரள வேண்டுமென அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் இந்தக் கூற்றை அடுத்து இவ்வாறான தடையொன்று இடப்படுவது சாத்தியமா? என்ற கேள்வி பலமாக எழுந்துள்ளது.

போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக சுயதீன விசாரணையொன்றைச் செய்ய அரசு மறுத்துவருகின்றது.

இவ்வாறு இலங்கை அரசு மறுத்துவரும் வேளையில் அதற்குப் பக்கபலமாக செயற்படப் பலநாடுகள் கோதாவில் குதித்துள்ளன. அந்நாடுகளை இரண்டு வகையாகப் பிரித்துப் பார்க்க முடிகின்றது.

முதலாவது வகை நாடுகள் இலங்கையில் போர் நடைபெற்ற போது அப்போருக்கான ஆயத தளபாட வசதிகளை வழங்கிய நாடுகள் ஆகும் .இந்நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக, சர்வதேச விசாரணைக்கு எதிராக இருக்கின்றமைக்கு மிக முக்கிய காரணம் என்னவாக? இருக்கலாம் என்னும் சந்தேகம் எழுந்துள்ள நிலையில் கிடைக்கக்கூடிய பதில்

1. இறுதிப்போரில் தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள் பாவிக்கப்பட்டிருந்தால்
2. அவ்வாயுதங்கள் நிச்சயமாக இலங்கைக்குச் சொந்தமானவையாக இருக்காதென்பதால்
3. அதனை வழங்கிய நாடுகள் எவை என்பதும், அவை தற்போதும் அவ்வாயுதங்களைப் பாவனையில் வைத்திருக்கின்றன என்பதும்

வெளிவந்துவிடும் என்ற காரணமாகத் தான் இருக்கலாம்.

இரண்டாவது வகை நாடுகள் அமெரிக்காவையும் அந்நாட்டின் கூட்டணி நாடுகளையும் தமக்குப் பொது எதிரியாகக் கொண்ட நாடுகள் ஆகும். அந்நாடுகள் அமெரிக்காவை எதிர்ப்பது எப்படியெனில் அமெரிக்கா எதற்கு ஆதரவு தெரிவிக்கின்றதோ அதனை எதிர்ப்பதும் அமெரிக்கக் கூட்டணி எவற்றை எதிர்க்கின்றனவோ அவற்றை ஆதரிப்பதும் என்ற கொள்கைப் பாட்டுடனேயே.

எனவே இவ்விரு வகை நாடுகளினதும் ஆதரவுடன் இலங்கை அரசு வெளிநாடுகளில் பல பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருவதுடன் இரகசிய நகர்வுகள் பலவற்றையும் முன்னெடுத்து வருகின்றது.

இந் நிலையில் உலக அரங்கில் பிவைக் காட்டி நிற்கும் அரசு உள்ளக அரங்கில் தமது நிமிர்வைக் காட் ''அனைத்துத் தடைகளையும் உடைத்தெறிவோம்'' என்ற வீர கர்ஜனையைச் செய்து வருகின்றது.

அவ்வாறான அரசியல் தந்திரத்தின் ஒரு அங்கமாகவே இலங்கைக்கு எதிரான பொருளாதாரத் தடை என்ற கதைகளை அரசோ அலலது அரச சார்பு அமைப்புகளோ கட்டவிழ்த்து வருகின்றன.

ஏனெனில் ஒட்டுமொத்த நாட்டையும் பாதிக்கின்ற விடயமே பொருளாதாரத் தடை ஆகும். பொருளாதாரத் தடையினால் இலங்கை மக்கள் அனைவரும் எவ்வித வேறுபாடுகள் இன்றி பாதிப்படைவர் என்பதே உண்மையானது. யுத்தத்தால் சின்னாபின்னமாகிப் போயுள்ள தமிழ் மக்களைக் கடுமையாக அந்த பொருளாதாரத் தடை பாதிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அவ்வாறான தடையொன்று முன்மொழியப்படுமானால் அதனை எதிர்க்க வேண்டிய தார்மீகக் கடப்பாடு தமிழருக்கும் உருவாகிவிடும். தமிழரின் அழிவிற்கு நியாயம் வழங்க முன்வர முயற்சிக்கும் சர்வதேசம் தமது நடவடிக்கையால் அதே தமிழரின் எதிர்ப்பலைகளைச் சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கியமான நிலையை இப் பொருளாதாரத் தடை ஏற்படுத்திவிடும். எனவே ஒரு போதும் சர்வதேசம் பொருளாதாரத் தடையினை உடனடியாக முன்மொழியப் போவதில்லை.

இவ்வாறானதொரு தெளிவான புரிதலில் "பொருளாதாரத் தடையொன்று வரலாம்" என்ற கதை யாரால் கிளப்பிவிடப் பட்டிருக்கலாம் என்பதை புரிந்து கொள்தல் இலகுவானதே.

பொருளாதாரத் தடை என்னும் வார்த்தைகளைக் கொண்டு பேரினவாதிகள் பொதுமக்களை இன்னும் உணர்ச்சி வசப்படுத்த முயற்சிக்கின்றார்கள். கொழுந்து விட்டெரியும் உணர்ச்சிப் புயலில் தேர்தல்களில் வாக்கு வேட்டை என்னவோ சாத்தியமாகலாம்.




ஆனால் பொருளாதாரத் தடை என்பது அமாவாசை நாட்களில் வேப்ப மரத்தடியில் தெரியும் பேய் போன்றதே.... பயப்படுத்தலாமே தவிர பயன்படுத்த முடியாது.

மாயன்

# ஜெனீவா - இலங்கையைக் காப்பாற்றுமா இந்தியா

சே.சஞ்சயன்



ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் எப்போதெல்லாம் இலங்கை விவகாரம் தலையெடுக்கிறதோ, அப்போதெல்லாம் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்ற கேள்வி எழுவது வழக்கம். இது போருக்குப் பிந்திய நிலை மட்டுமல்ல, போரின் போதும் கிட்டத்தட்ட இதே நிலை தான் இருந்தது.

1980களின் நடுப்பகுதியில் போர் தீவிரம் பெறத் தொடங்கிய காலத்தில், இலங்கையின் பொலிஸ் விசேட அதிரடிப்படைக்கு பிரித்தானியா பயிற்சி அளித்தது. இந்தியப் பிரதமராக இருந்த இந்திராகாந்தி, பிரித்தானியப் பிரதமர் மார்க்கிரட் தட்சருக்கு அந்தப் பயிற்சிகளை நிறுத்தும்படி அப்போது அழுத்தம் கொடுத்திருந்தார்.

இலங்கை அந்தக் காலகட்டத்தில் அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட மேற்குலகின் பக்கம் நின்றது. இந்தியாவோ, ரஸ்யாவின் பக்கம் சார்ந்திருந்தது.

இப்போது நிலைமை தலைகீழாகி விட்டது. கிட்டத்தட்ட அமெரிக்காவின் பக்கம் இந்தியா நிற்கிறது. ரஸ்யா, சீனாவின் பக்கத்தில் இலங்கை இருக்கிறது.

என்றாலும், 1987ஆம் ஆண்டுக்குப் பின்னர், இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் கையை மீறி எதுவுமில்லை என்ற நிலை உருவாகி விட்டது.

இந்தியாவின் கருத்தை அறியாமல், இலங்கையில் போரின் போதும் சரி, சமாதான முயற்சிகளின் போதும் சரி, எந்தவொரு நாடும் நேரடியாகத் தலையிட விரும்பியதில்லை. இப்போதும் கூட, இலங்கை மீது தனக்கு எந்த ஆளுமையும் கிடையாது என்று இந்தியா கூறினாலும், இலங்கை விவகாரத்தில் எத்தகைய நகர்வுகளில் இறங்க முன்னரும், இந்தியாவைக் கலந்தாலோசனை செய்ய முனைகின்றன.

அதனால் தான், ஜெனிவாவில் இலங்கை விவகாரத்தை தூக்கிப் பிடிக்க முனையும் போதெல்லாம், இந்தியா எந்தப் பக்கம் நிற்கிறது, அதன் நிலைப்பாடு என்ன என்று கேள்விகள் எழுகின்றன.

அண்டை நாடான இலங்கை மீது இந்தியா, பெரியளவில் செல்வாக்குச் செலுத்தும் நிலையில் உள்ளதாக குறிப்பிட முடியாவிட்டாலும், இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பதை அறிவது பெரும்பாலான நாடுகளினது எதிர்பார்ப்பாக உள்ளது.

இலங்கை விவகாரத்தில் இந்தியா எடுக்கும் முடிவை மதிக்கும் நிலையில், வேறும் பல நாடுகள் இருப்பதும், இத்தகைய கேள்விகள் எழுவதற்கு இன்னொரு காரணம்.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை முன்வைக்கும் அமெரிக்காவைப் பொறுத்தவரையில், இதற்கு முந்திய இரண்டு முறை தீர்மானங்களை முன்வைத்த போதும், இந்த முறையும் இந்தியாவினது கருத்தை அறிவதில் - அதன் ஆதரவைத் திரட்டுவதில் முக்கிய கவனம் செலுத்தியது. இப்போதும், அப்படியே செய்து வருகிறது.

கடந்த மாத இறுதியில், ஜெனிவா தீர்மானம் குறித்த ஆலோசனைகளுக்காக கொழும்பு, லண்டன், ஜெனிவா நகரங்களுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால், புதுடெல்லிக்குப் பயணம் மேகொள்ளாதது பலரது புருவங்களையும் உயர்த்தியது.

ஆனால், ஜெனிவா சென்று, அவர் முக்கியமாக கலந்துரையாடியது இந்தியப் பிரதிநிதி திலிப் சின்ஹாவுடன் தான் என்பது பெரும்பாலும் வெளியே வராத இரகசியம். நிஷா பிஸ்வால் தம்மைச் சந்தித்ததை மட்டும், இந்தியன் எக்ஸ்பிரசிடம் உறுதிப்படுத்திய ஜெனிவாவுக்கான இந்தியப் பிரதிநிதி திலிப் சின்ஹா, மேலதிகமாக ஒரு வார்த்தையையும் கூட வெளியிட மறுத்து விட்டார்.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு இந்தியாவினது ஆதரவைப் பெறுவது தான், இந்தச் சந்திப்பின் நோக்கம் என்பதில் எவ்விதம் சந்தேகமும் இல்லை. இந்தியாவினது ஆதரவை உறுதிப்படுத்திக் கொண்டால், இந்த தீர்மானத்தை நிறைவேற்றும் முயற்சியில் பாதிக்கிணறைத் தாண்டி விடலாம் என்றே அமெரிக்கா கருதுகிறது. இத்தகைய பின்புலத்தில் தான், கடந்த வாரம் புதுடெல்லிக்கு அழைக்கப்பட்ட கொழும்பு ஊடகவியலாளர்களுடன், சவுத் புளொக் விரிவான கலந்துரையாடல்களை நடத்தியிருந்தது.

ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போது, இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், சில விடயங்களைச் சுட்டிக்காட்டியிருந்தார். அவை அனைத்தும், ஜெனிவாவில் இலங்கைக்கு இந்தியா ஆதரவளிக்காது என்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டும் வகையில் அமைந்தவை. இந்தியாவில் அடுத்த மூன்று மாதங்களுக்குள் நாடாளுமன்றத் தேர்தல் வரவுள்ளது.

அதில், இந்த ஜெனிவா தீர்மானம் தாக்கம் செலுத்தும் ஒன்றாக இருக்கும். எனவே, ஜெனிவா தீர்மானம் குறித்த இந்தியாவின் நிலைப்பாட்டில், நாடாளுமன்றத் தேர்தலின் நிழல் கவிந்திருக்கும் (தாக்கம்) என்று சல்மான் குர்ஷித் குறிப்பிட்டிருந்தார்.

அவர் அவ்வாறு கூறியது, இந்தமுறையும் இந்தியா கொள்கை ரீதியான முடிவை எடுப்பதற்குப் பதிலாக முற்றிலும் அரசியல் ரீதியான முடிவையே எடுக்கும் என்பதை தான். கடந்த இரண்டு முறை, கூட்டணிக் கட்சிகளின் அழுத்தங்களுக்கு அடி பணிந்தே, இந்திய அரசாங்கம் ஜெனிவா தீர்மானத்தை ஆதரிக்கும் முடிவை கடைசி நேரத்தில் எடுத்தது. இருந்தாலும், இந்தியா தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, அமெரிக்கத் தீர்மான வரைவை நீர்த்துப் போகச் செய்து விட்டதாக பரவலான குற்றச்சாட்டுகள் எழுந்தன.

ஆனால் இந்தியா அதை மறுத்தே வந்துள்ளது. இந்தமுறை, தேர்தலை எதிர்கொள்ளவுள்ள நிலையில், தமிழ்நாட்டில் தமக்கான கூட்டணி ஒன்றை அமைத்துக் கொள்வதற்கும், தேர்தலில் பெருந்தோல்வி ஏற்படாமல் தவிர்த்துக் கொள்வதற்கும், ஜெனிவா விவகாரத்தில், புதுடெல்லி அனுசரித்தே போக வேண்டிய நிலையில் உள்ளது.

அதேவேளை, ஜெனிவா தீர்மானத்தை இந்தியா நீர்த்துப் போகச் செய்து விடும் என்று இம்முறையும் இலங்கை அரசாங்கம் பலமாக நம்பியதாகத் தெரிகிறது.

ஜனாதிபதிக்கு மிகவும் நெருக்கமானவராகி விட்ட அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, சில நாட்களுக்கு முன்னர் அளித்த பேட்டி ஒன்றில், அமெரிக்கத் தீர்மானத்தை இந்தியா நீர்த்துப் போகச் செய்து விடும் என்று உறுதியான நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் வெளியிட்ட கருத்துகள், அரசாங்கத்தின் இந்த நம்பிக்கையில் மண் அள்ளிப்போட்டு விட்டதாகவே தெரிகிறது.

அரசாங்கத்தின் ஏமாற்றத்தை, கடந்தவாரம் அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல வெளிப்படுத்தியிருந்தார்.

சல்மான் குர்ஷித்தின் கருத்துகள், இந்தியா மற்றொரு நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்படுவதான சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அவர் கூறியிருந்தார்.

இப்போதைய நிலையில், ஜெனிவா என்பது இலங்கைக்கு மட்டுமன்றி இந்தியாவுக்கும் பொறி தான்.

ஜெனிவா குறித்து புதுடெல்லி எடுக்கப் போகும் முடிவு, இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நலன் சார்ந்த ஒன்றாகவே இருக்கும் என்ற கருத்து ஏற்கனவே வலுவடைந்திருந்த சூழலில் தான் அதனை இந்திய வெளிவிவகார அமைச்சர் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜெனிவா தீர்மானத்தை ஆதரிக்க இந்தியா முடிவு செய்தால், அது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளை மேலும் சிக்கலடையச் செய்யும் என்று கொழும்பு கருதுவதாகத் தெரிகிறது.

இது இந்தியாவுக்கு சிக்கலானது. அது சீனா பற்றிய பயத்தை இந்தியாவுக்கு மேலும் அதிகரிக்கச் செய்து விடும்.

இலங்கையில் சீனத் தலையீடுகள் குறித்து, இந்தியா அச்சம் கொள்ளவில்லை என்றும் அதைப் பெரிய விவகாரமாகவே எடுத்துக் கொள்ளவில்லை என்றும், இந்திய வெளிவிவகார செயலர் சுஜாதாசிங் அண்மையில் கூறியது உண்மையான கருத்தல்ல.

இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளிக்க மறுத்தால், அவர்கள் சீனாவுக்கு அனுப்பப்படுவார்கள், இலங்கைக்கு இந்தியா உதவ மறுத்தால் அதற்குள் சீனா நுழைந்து விடும் என்றெல்லாம் கூறி, இலங்கைக்கான இராணுவ, அரசியல் உதவிகள் அனைத்தையும் நியாயப்படுத்தி வந்தது இந்திய அரசாங்கமும் அமைச்சர்களும் தான்.
திடீரென இப்போது, சீனா பற்றி அச்சமில்லை என்று இந்தியா கூறுவது வேடிக்கையானது. எவ்வாறாயினும், இலங்கைக்கு எதிரான அணியில், வரிசை கட்டப்போகும் இந்தியாவுக்கு எதிரான அணியிலேயே சீனாவும் நிற்கிறது.

ஆனாலும், இந்த முறையும் சீனாவுக்காக உள்ளூர் அரசியல் நலன்களைத் தியாகம் செய்வதற்கு புதுடெல்லியில் ஆளும் காங்கிரஸ் கட்சி தயாராக இல்லை. ஜெனிவா விவகாரத்தில் இந்திய நிலைப்பாடு, அமெரிக்காவுக்கு சாதகமாக மாறி வருவதையே சல்மான் குர்ஷித்தின் கருத்துகள் புலப்படுத்தியுள்ளன. அதிலும், தீர்மானம் குறித்து மேற்குலகுடன் இலங்கை பேச வேண்டும் என்றும், அவர்களின் நம்பிக்கையை பெற வேண்டும் என்றும் ஆலோசனை கூறியுள்ளது.

இதன் மூலம், சர்வதேச நம்பகத்தன்மையை பெறுவதற்கு இலங்கை தவறிவிட்டது என்பதை குர்ஷித் சுட்டிக்காட்டியுள்ளார். இவையெல்லாம் இலங்கை அரசுக்கு கசப்பான விடயங்களாகவே தெரிகின்றன.

ஆனாலும் சீனா, ர'யா உள்ளிட்ட நாடுகளின் ஆதரவு இருக்கும் தைரியத்தில், இலங்கை அரசாங்கம், இந்தியாவினது கருத்துகளையும் நிலைப்பாட்டையும் பொருட்படுத்தாமல், ஜெனிவா தீர்மானத்துக்கு சவால் விடுவதிலேயே கவனத்தை செலுத்தி வருகிறது.

இது இன்னொரு முறை, சர்வதேச அரங்கில் மூக்குடைபடுவதற்கான முன்னோட்டமாகவே தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளக்கோட்டன் என்னும் தர்ம சீலன்

- பகுதி 04 -

## கடந்த வார தொடர்ச்சி. . .

குளக்கோட்டன் என்னும் தர்ம சீலன் ஆற்றிய பணி இன்றும் திருகோணமலை தொடக்கம் திருக்கோயில் வரை ஒருவித குறைபாடுகளுமின்றி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கால மாற்றத்தினால் சொல்லமுடியாத அளவுக்கு இந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் துன்பங்களை அனுபவித்து வந்த போதும் அவற்றினைக் கைவிடாமை குறிப்பிடத்தக்கதாகும்.



மன்னர்கள் அண்டை நாடுகளைக் கைப்பற்றுவதும் தமது ஆட்சிக்குட் படுத்துவதும் பின்னர் அவற்றை விட்டு செல்வதும் வழமை என்பது வரலாறு. இருந்தும் குளக்கோட்டன் என்னும் தர்மசீலன் ஆற்றிய பணியானது இன்றுவரை மக்கள் அவனை மறக்காமல் ஒரு தெய்வீக குருசனாகப் போற்றி வணங்கச் செய்திருக்கிறது.

திருக்கோணேஸ்வரம், தம்பலகாமம், வெருகல், கொக்கட்டிச்சோலை ,திருக்கோயில் போன்ற இடங்களில் அவன் அமைத்த கோயில்கள் சிறப்பாகச் செயற்பட்டு இற்றைவரை ஆன்மிகப் பணியை மிகச்சிறப்பாகச் செய்து வருகின்றன.

திருகோணேஸ்வரத்தில் அவன் திருவுருவச் சிலை கம்பீரமாக காட்சியளிக்கிறது. மக்கள் அவன்சேவைக்கு மகுடம் சூட்டுவது போல பாடசாலைகளுக்கு, நூலகங்களுக்கு, பூங்காக்களுக்கு, நிறுவனங்களுக்கு ‘குளக்கோட்டன் ’ எனப் பெயர் சூட்டி வாழ்த்தி வணங்கி வருகிறார்கள்.

குளக்கோட்டன் திருப்பணி செய்த திருக்கோணேஸ்வரம் இருக்கும் வரை தமது சமயத்தைப் பரப்ப முடியாது என்பதைப் புரிந்து கொண்ட போர்த்துக்கீசர் அந்த ஆலயத்தை இடித்துத் தரைமட்டமாக்கினர். இதனை முற்கூட்டியே அறிந்து கொண்ட தொழும்பாளர்கள் கோணேசர் திருவுருவையும் ஏனைய விக்கிரகங்களையும் நிலத்தில் புதைத்து வைத்தும், தம்பலகாமத்திலுள்ள களனி மலையில் கோணேப்பெருமானை வைத்து இரகசியமாகப் பூசித்தும் வந்தனர்.

பின்னர் இத்திருவுருவங்கள் கண்டெடுக்கப்பட்டு இன்று திருகோணமலையில் கோணேஸ்வர ஆலயம் மிகச்சிறந்த நிலையில் தனது பணிகளை ஆற்றி வருகிறது என்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

இதே போல களனிமலையில் வைத்து வணங்கப்பட்டு வந்த ஆதிகோணநாயகர் திருவுருவை கண்டியிலிருந்து அரசு செய்த இராசசிங்கன் என்னும் மன்னன் இற்றைக்கு இருநூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன் தம்பலகாமத்தில் தற்போதுள்ள ஆலயத்தை கட்டிமுடித்து கோணநாயகர் திருவுருவையும் ஏனைய பரிவாரத் தெய்வங்களையும் பிரதிஷ்டை செய்து குளக்கோட்டன் காலத்திலிருந்ததைப் போல சகல காரியங்களும் நடைபெறவேண்டும் என ஆணையிட்டு கண்டிக்குச் சென்று தனது நல்லாட்சியை தொடர்ந்தனன் என திருகோணாசல வைபவம் என்ற நூல் கூறுகிறது.

தனக்கென வாழாது தனது நாட்டு மக்களுக்காக அவர்களது நல் வாழ்வுக்காக அல்லும் பகலும் சிந்தித்து கோணநாயகர் வழிபாட்டை தன் மக்களுக்கு வழங்கி, அவ்வழிபாட்டிற்கான சகல மானியங்கயையும் கொடுத்து, வழிபாடு சிறப்புற்றோங்குவதற்கான சிறந்த கட்டமைப்பையும் உருவாக்கி தன் கடமையில் தன்னிறைவு கண்ட குளக்கோட்டு மாமன்னன் இன்றும் என்றும் தன்னிகரற்ற தர்ம சீலனாக மக்கள் மத்தியில் பிரகாசிப்பான்.

### உசாத்துணை நூல்கள்


1. கோணேஸ்வரம். திரு. க.குணராசா.

2.திரிகோணாசலப் புராணம். முத்துக்குமாரசாமிப்பிள்ளை. பிப்பு அழகக்கோன் 1950.

1.. யாழ்ப்பாண வைபவமாலை. மாதகல் மயில்வாகனப் புலவர் பதிப்பு. கலாநிதி .க.குணராசா.

4. யாழ்ப்பாணச் சரித்திரம். செ.இராசநாயகம். புதிப்பு. 1999.

5. வரலாறறுத்திருகோணமலை. கனகசபாபதி சரவணபவன். புதிப்பு.2003.

6. குளக்கோட்டன் தரிசனம். செல்வி க.தங்கேஸ்வரி. பதிப்பு. 1993.


-முற்றும்-

**வே. தங்கராசா**
*தம்பலகமம்*

# இப்படியும் நடக்கலாம் !!!

## கடந்த வார தொடர்ச்சி. . .

மேலும் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஒருவர் எவ்விதம் தனது தொழில் வழங்குநர் ஊடாக வழக்கு தாக்கல் செய்வது? என்ற கேள்வியை விண்ணப்பதாரியின் சார்பில் தோன்றிய சட்டத்தரணி கேட்க மறக்கவில்லை. அத்துடன் வேலை நீக்கம் செய்யப்பட்டவர் சட்ட உதவியை நாடி மீண்டும் தனது தொழிலை ஏன் பெறக்கூடாது? ஏன்பதும் அங்கு விவாதமாக இருந்தது.

ஒருவருக்கு பதவி வழங்கப்பட்டு அப் பதவியை உறுதிப்படுத்துவதற்காக மூன்று வருட நன்நடத்தைக் காலம் எங்கும் வழங்கப்படுவது சகஜம். அவ்விதம் குறித்த ஊழியருக்கும் வழங்கப்பட்டிருந்தது. அந்த காலகட்டத்தில் நிறுவனம் போலி ஆவணப் பிரச்சினையை முன்வைக்க தவறிவிட்டு, சுமார் 17 வருடங்களுக்குப் பின் அப்பிரச்சினையின் நிமித்தம் ஒருவரை முற்றாக வேலையிலிருந்து நீக்குவது மனிதாபிமானத்திற்கு முற்றாக எதிரானதாகும்.

குறித்த மூன்று வருட காலத்தில் ஊழியர் ஒருவரின் நடத்தை, நேர்மை, ஒழுக்கம், கடமை உணர்வு ஆகியவற்றை நன்கு அலசி ஆராய்ந்ததன் பின்னரே அவர் சேவையில் உறுதிப்படுத்தப்படுகிறார். ஆவ்விதம் இருக்கையில் இன்று அவனுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அடிப்படையற்றதாகும். அத்துடன் அவனது பெயரில் பதியப்பட்ட உண்மையான சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டபோது அதை பரிசீலனை செய்து அதன் உண்மை நிலையை அறியாது அமைதியாக இருப்பது மேலும் பல சந்தேகங்களை கிளப்பியுள்ளது.

அவனுடைய சேவை திருப்தி என்பதாலும் அவனிடம் எந்த குறைபாடும் காணாததாலும் உயர் அதிகாரிகளின் பரிந்துரையின் பேரிலே அடுத்த நடவடிக்கையாக அவன் சேவையில் உறுதி செய்யப்பட்டுள்ளான். ஆவ்வாறிருக்க நீண்டகால சேவைக்கு பின் அவன் சேவையில் இருந்து நீக்கப்படின் சுமார் 40 வயதுடைய அவன் பிறிதொரு வேலையை தேடிக்கொள்வது இன்றைய காலகட்டத்தில் இயலுமான காரியமா? ஏன்பதனை குறித்த நிறுவனம் ஏன் சிந்திக் தவறியதோ தெரியவில்லை.

### ...நாட்டு நடப்பு...

ஊழியர் ஒருவரின் குறைபாடுகளை கண்டுபிடிப்பதற்காகவே மூன்று வருட தகுதிகாண் காலம் வழங்கப்படுகிறது. ஆக்கால கட்டத்தில் அவ்விதமான தவறுகளை, குறைபாடுகளை கண்டுபிடிக்க தவறியது நிர்வாகமே. எனவே நிர்வாகத்திற்கு எதிராக ஏன் சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடாது என்ற கேள்வியும் அங்கு

முற்றும்!!

**பாலையூற்றான்**

# 10 வயது குள்ள மனிதன்

10 வயதான சிறுவனொருவன் தனது பெற்றோருக்குத் தெரியாமல் அவர்களின் காரை செலுத்திச் சென்ற வேளை பொலிஸார் சோதனையிட்டபோது தான் குள்ளமான ஒரு மனிதன் எனவும் சாரதி அனுமதிப்பத்திரத்தை வீட்டில் மறதியாக வைத்துவிட்டு வந்ததாகவும் கூறிய சம்பவம் நோர்வேயில் இடம்பெறுள்ளது.

ஒரு நாள் காலை 6 மணியளவில் வீட்டிலிருந்து தனது 18 மாத தங்கையையும் ஏற்றிக் கொண்டு காரில் தனது தாத்தா பாட்டியின் வீட்டைநோக்கி புறப்பட்டான். அவ்வேளையில் அச்சிறுவனின் பெற்றோர் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தனராம்.

இச்சிறுவன் 10 கி.மீற்றருக்கும் அதிகமான தூரத்தை கடந்து சென்றுகொண்டிருந்த வேளையில் வீதியில் ஒருவர் சிறுவன் காரை செலுத்துவதை அவதானித்து பொலிஸாருக்கு தகவல் கொடுத்தார்.

அதையடுத்து பொலிஸார் அக்காரை மறித்து சோதனையிட்டபோது, தனது வயதை மறைத்த அச்சிறுவன், தான் வளர்ச்சி குறைந்த குள்ள மனிதன் எனவும் தனது சாரதி அனுமத்திப்பத்திரத்தை எடுத்துவர மறந்துவிட்டதாகவும் கூறினான். இதேவேளை வீட்டில் பெற்றோர் தமது பிள்ளைகளையும் காரையும் காணாமல் தவித்தாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.



# வீட்டில் இளைப்பாறிய திருடன்

இங்கிலாந்திலுள்ள வெஸ்ட் போர்க்ஷிர் என்ற இடத்தில் பூட்டியிருந்த வீட்டுக்குள் 22 வயதான குஷரூக் என்ற கொள்ளையன் புகுந்தான். அவன் அங்கிருந்த பொருட்கள் நகை மற்றும் பணத்தை கொள்ளையடித்து மூட்டை கட்டினான். நீண்ட நேரமாக இச்செயலில் ஈடுபட்டதால் மிகவும் களைப்படைந்தான். அதை தொடர்ந்து வீட்டில் இருந்த படுக்கையில் படுத்து அயர்ந்து குறட்டை விட்டு தூங்கி விட்டான். இதற்கிடையே வீட்டு உரிமையாளர் திரும்பி வந்து விட்டார். தூங்கும் திருடனை பார்த்த அவர் காவல்துறைக்கு தகவல் கொடுத்தார். காவல்துறை கொள்ளையன் குஷரூக்கை கைது செய்தனர். அவன் மீது நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர். 18 மாத சிறைத்தண்டனையும் கிடைத்தது அவனுக்கு.

# வளர்ந்துவரும் நாய்!

7 அடி 1 இஞ்ச் உயரத்தில் பிரிட்டனின் மிக உயரமான நாய் ஒன்றை வளர்த்து வருகிறார் Claire Stoneman என்ற பெண். காலில் இருந்து தோள் வரை சுமார் 41 இன்ச் உயரம் உள்ள இந்த நாய், கின்னஸ் சாதனை புரிய இன்னும் மூன்று இன்ச் உயரமே தேவைப்படுகிறது. தற்போது Zeus என்ற நாய் 44 இன்ச் உயரத்தில் கின்னஸ் சாதனை பெற்று விளங்குகிறது. இந்த நாயின் உணவுக்கு மட்டும் வாரம் ஒன்றுக்கு 75 பவுண்டுகள் செலவு செய்வதாக இதன் உரிமையாளர் கூறுகிறார். இந்த நாய் இன்னும் வளர்ந்து கொண்டிருப்பதாகவும், அனேகமாக இன்னும் ஒரு மாதத்தில் கின்னஸ் சாதனைக்கு தேவையான வளர்ச்சியை பெற்றுவிடும் என்றும் கூறியுள்ளார். இந்த நாய் இவருடைய வீட்டில் உள்ள 14 சோபாக்களை இதுவரை நாசமாக்கியுள்ளதாகவும் அவர் வருத்தத்துடன் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஒரு தோசையும் தொட்டுக் கொள்ள நான்கு மாத்திரைகளும் !!

**சிறுகதை**
பாகம் - 01

*குடும்பம் ஒரு கோவில் என்பார்கள் அது இந்த குடும்பத்திற்கே பொருந்தும். மூன்று அண்ணன் தம்பிகளும், அவர்களின் மனைவியர் மற்றும் குழந்தைகளும் அவர்களுக்கு நடுவே ஒரு இதய நோயாளியான தந்தையுமென திறக்கிறது இக்கதைக்கான கதவுகள்.*

"ஐயோ... தாத்தா!"

"அம்மா தாத்தா குளிக்கிற அறை கதவருகை விழுந்துட்டாரு."

"என்னடி சொல்ற?"

"உண்மையா தாம்மா, வந்து பாரேன்..."

"ஐயோ ஆமா..., என்னங்க அப்பா மயக்கம் போட்டு விழுந்துட்டாருங்க."

"ஏம்மா இப்படி அலர்ற, ஐயோ அப்பாவுக்கு என்னாச்சு?"

"தெரியலிங்க, திடீர்னு மயங்கி விழுந்துட்டாருங்க.."

"குட்டி நீ போ.. போய் வெளியே சித்தப்பா பேசின்ருக்கான் அவனை கூட்டியா, ராஜா எங்கமா.."

"சித்தப்பா தெரிலையேப்பா" அந்த குழந்தை சொல்லிவிட்டு வெளியே ஓடிபோய் மூன்றாவது கடைசி தம்பியான சுகுமாரிடம் சொல்ல, அவன் அப்பா மயக்கம் என்றதும் வீட்டிற்குள் ஓடி வந்தான், வந்து அப்பாவை தூக்கி மடிமேல் கிடத்தி கன்னம் தட்டி -

"என்னண்ணே ஆச்சு, அப்பயே சொன்னேன் அப்பா சொல்றதை கேட்டா தானே..."

"ஏய் நீ சும்மா பதறாத, ராஜா எங்க? போய் கூட்டியா..."

"சின்னண்ணே அப்பவே மேலே போய் படுத்துடுச்சிண்ணே."

"சரி நீ ஒண்ணு செய், நீ போய் ஆனந்த் மருத்துவமனைல டாக்டர் போய்டப் போறாங்க, கொஞ்சம் சொல்லிவை, அப்பாவ நாங்க பின்னாலேயே கூட்டியாறோம்."

"போன் செய்து சொன்னா..."

"சொல்றதை செய்டா, அதலாம் மரியாதையா இருக்காது, நமக்கு மட்டுமா அவர் மருத்துவமனை நடத்துறாரு, நேரில் போய் சொன்னா கொஞ்சம் மதிப்பாங்கல்ல."

"சரிண்ணே."

"அதில்லாம அப்பா புது நோயாளி இல்லை சுகு, இப்போ இந்த நேரத்திற்கு ஆவடி போயி தாமதப்படுத்துவதும் அத்தனை சரியில்லை, இங்க கூட்டிப் போகணும்னா அவர் பெரிய டாக்டர் இருந்தா நல்லது, அதான் நீ கொஞ்சம் நேர்ல போய் பார்த்துச் சொல்."

அவன் அதற்கும் தலையாட்டிவிட்டு ஓடிப்போய் வெளியிலிருந்த பைக்கில் பறந்தான்.

"ஏம்மா ரம்யா நீ மேல போய் ராஜாவ எழுப்பி கூட்டியா, அங்கேயே ஏதும் சொல்லாதே தூக்க கலக்கத்துல அதிர்ச்சியாவப் போறான்."

"சரி மாமா" என்று சொல்லிவிட்டு சுகுமாரின் மனைவி வேகமாக ராஜாவை கூப்பிட படியேறி மேலே ஓடினாள். சுதர்மன் உள்ளே எட்டி மணி பார்த்தார் மணி ஒன்பது.

"பிரேமா நீ கார் ஓட்டுவல்ல.."

"ஓட்டுவேங்க."

"போய் சாவி எடுத்து வா வண்டிய வெளியே எடு.."

அதற்குள் ராஜா இறங்கி ஓடி வந்தான்.

"அண்ணே அண்ணே என்னண்ணே ஆச்சு அப்பாவுக்கு, அப்பா.. அப்பா.." ராஜா அப்பாவை தூக்கி மடியில் கிடத்திக் கொண்டு கதறினான்.

"டேய்.. டேய்.. புடி அப்படியே அவரை தூக்கு, ஒன்னுல்ல இந்த லூசு பாயசம் கேட்டாருன்னு கொடுத்துச்சாம்."

"நான், ஒன்னும் இல்லீங்க, அப்பா தான் கொஞ்சம் கொடுமான்னு..."

"போடி.. போய் வண்டி எடு, ஏம்மா வீட்ட சாத்திக்கோ, குழந்தைங்க வெளியே போய்டாம."

"நானும் வர்றேன் மாமா.."

"குழந்தைங்களை எங்க, டிக்கியில போட்டுடலாமா?"

"சரி இருக்கேன் மாமா."

"சின்ன பாப்பா அழுதுச்சுன்னா கொஞ்சம் பால் காய்ச்சி கொடு ரம்யா" பிரேமா கத்திக் கொண்டே ஓடிப்போய் வண்டி எடுத்தாள். சுகுமார் பைக் எடுத்துக் கொண்டு மருத்துவமனை நோக்கி ஓடினான். மூத்தவன் சுதர்மனும் அடுத்தவன் ராஜாவும் அப்பாவை தூக்கி வண்டியில் வைத்துவிட்டு ஏறி அமர, ராஜாவின் மனைவி பார்வதி அவசரமாக ஓடிவந்து அப்பாவின் முந்தைய மருத்துவ விவரங்களை பிரேமாவிடம் கொடுக்க, பிரேமா அவசரமாக அதை வாங்கி சுதர்மனிடம் கொடுத்துவிட்டு வண்டியை திருப்பி நிறுத்த...



சுதர்மன் வெளியே எட்டிப் பார்த்து, "ஏம்மா வீட்டுக்கு போன் செய்து உங்க அப்பா இருந்தால் அவர்கிட்ட சொல்லி ஆனந்த் மருத்துவமனைக்கு போன் செய்து ஒரு வார்த்தை சொல்ல சொல்லுமா.

"சொல்லிடறேன் மாமா, அப்பா கண்ணையே திறக்கலையே... மாமா?"

"அதலாம் நம்மப்பாவுக்கு ஒன்னும் ஆகாதும்மா."

"ஆகாது மாமா..., ஆனா.."

"சீக்கிரம் வண்டிய எடு பிரேமா."

குறுக்கு வழியே புகுந்து ஆனந்த் மருத்துவமனை வந்தார்கள், அப்பா வாயை "ஆ"வென்று பிளந்துக் கொண்டு கண்மூடி படுத்தவாறு லேசாக கடினப்பட்டு இழுத்து இழுத்து மூச்சு விட்டுக் கொண்டிருந்தார். அவரின் அவஸ்தை நிறைந்த முகம் பார்க்க பார்க்க சுதர்மனுக்கும் ராஜா வுக்கும் கண்கள் தன்னையறியாமல் கலங்கியது.



சற்று நேரத்திற்குள் மருத்துவமனை வந்து விட, வண்டி நின்று இறங்குவதற்குள், சுகுமார் ஓடி வந்தான். சுதர்மனும், ராஜாவும் அப்பாவை தூக்கப் போக "நீ விடுண்ணே, நீ போய் மருத்துவரை பாரு" என்று சொல்லிவிட்டு அவன் தூக்கிக் கொண்டான். சுதர்மன் உள்ளே போவதற்குள் மருத்துவரே எழுந்து வெளியே வந்தார்.

"டாக்டர் அப்பா திடீர்னு.."

"சுதர்மன் நீங்க தானே?"

"ஆமா டாக்டர்"

"இதுக்கு முன்னாடி இப்படி வந்திருக்கா?"

"வந்துருக்குங்க"

"இதற்கு முன் எங்க பார்த்தீங்க.."

"ஆவடில குடும்ப மருத்துவர் ஒருத்தர் இருக்காரு அவர்தான்.."

"ஓ... பரவாயில்லை பரவாயில்லை."

மருத்துவர் அப்பாவின் கண்களை திறந்து பார்த்தார். மார்பில் ஸ்டெதஸ்கோப் வைத்துச் சோதித்துவிட்டு "ராஜகுரு போன் பண்ணாரு, ஒன்னும் ஆவாது பதட்டப்படாதீங்க, சிஸ்டர் வார்ட் நர்ஸ் கூப்பிடுங்க, நேரா மேல கொண்டு போகச் சொல்லுங்க."

ஒரு பத்து நிமிடம் கழித்து. அப்பாவைக் கொண்டு போய் மேலே படுக்க வைத்து சுகர் பிரெசர் எல்லாம் பரிசோதித்து விட்டு, ஒரு ஊசி போட, சற்று நேரத்திற்கெல்லாம் அப்பா முணுமுணுத்துக் கொண்டே கண்ணைத் திறந்தார்.

பிள்ளைகள் மாறி மாறி அப்பாவை கட்டிப் பிடித்துக் கொண்டனர்.

"என்னாச்சு டாக்டர் அப்பாவுக்கு, பயப்பட ஒண்ணுமில்லையே?"

"சுகர் பேசெண்ட் தானே?"

"ஆமா டாக்டர்"

"மயக்கம் வந்தா மிட்டாய் ஏதேனும் கொடுத்திருக்கலாமே."

"பாயசம் சாப்பிட்டு தான் டாக்டர் மயக்கமே வந்திருக்கு."

"நல்லா விசாரிச்சி பாருங்க முழுசா அவர் அதை குடித்திருக்க மாட்டார், ஏன்னா அவர் லோ பிரெசரால தான் மயங்கி இருக்கார், அதில்லாம சைலண்ட் அட்டாக் வேற வந்திருக்கு."

"சைலண்ட்........?"

"ம்ம், எப்படின்னு சொல்றேன், இருந்தாலும் அடுத்தமுறை இப்படி வந்தா ரொம்ப கவனமா இருக்கணும்."

"கண்டிப்பா டாக்டர்."

"முதல்ல நீங்க ஆளுக்காளு பதட்டப்பட உணர்ச்சிவயப்பட்டதுல அவருக்கு பிரெசர் இன்னும் ஏறிட்டிருக்கு. அதிக பிரெசரால இதய அழுத்தம் வந்திருக்கு. பொதுவா டயாபட்டீஸ் உள்ள நோயாளிக்கு பிரெசர் கூடினா அது விரைவா கிட்னியை பாதிக்கும், இதயத்தையும் பாதிக்கும்."

"இல்லை டாக்டர், அப்பாக்கு முன்பு ஐ சுகர் தான் இருந்தது."

"நீங்க சொல்றது சரி தான் சுதர்மன், ஆனா டயாபட்டீஸ் நோயாளிக்கு சில நேரம் இப்படி சரியான ஆகாரம் இல்லாமல், மாத்திரை மட்டும் போட்டு, கூடவே ஸ்டைன் பண்ணாங்கன்னா, அதி வேகமான எனர்ஜி லாசால சிலநேரம் சுகர் குறையவும் வாய்ப்புண்டு. அதனால தான் டயாபட்டீஸ் உள்ளவங்க எப்போ மயங்கினாலும் ஒரு மிட்டாயோ அல்லது கொஞ்சம் சர்க்கரைத் தண்ணியோ கொடுக்கணும்னு நாங்க ரெகெமன்ட் பண்றோம்.

அப்படி கொடுப்பதால, ஒருவேளை அவுங்களுக்கு ஐ சுகர் இருந்தாலும் இனிப்பு சாப்பிடுவதால சுகர் கொஞ்சம் கூடும் அதனால் உடம்புக்கு கெடுதல் நேரும் ஆனா உயிருக்கு ஆபத்து இருக்காது. ஆனா லோசுகர் இருந்து காலம் கடத்தி னீங்கனா அது அவருடைய உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும். உண்மையில் அப்பா இன்று பிழைத்தது தெய்வாதீனம் தான்."

"அச்சச்சோ!" பிரேமா வாயில் கைவைத்துக் கொண்டாள்.

"அதே மாதிரி பெரியவங்கன்னாலே கூடுதல் கவனமும் வேணும். இதுபோன்ற சந்தர்ப்பங்கள்ல அவர்களை அதிகம் உணர்ச்சிவசப்படுத்தவோ, தூக்கி இறக்கும் போது அதிகம் அழுத்தவோ வேகமா தூக்கவோ இறக்கவோ கூடாது. அதுலயும் அப்பாவோட, பழைய விவரங்கள்லாம் பார்த்தபிறகு தான் அவருக்கு அதிக கொலஸ்ட்ரால் இருப்பதும், இதய நோயாளி என்றும் தெரிய வந்தது. இது மிக ஆபத்தான ஒரு கட்டம். டயாபட்டீஸ் ஒண்ணு இருந்தாலே பத்து நோய் இருப்பதற்கு சமம். அதனால், கண்ணு கிட்னி இதயம் மூளை நரம்புகள் தோள் என எல்லாமே "கால்நகத்திலிருந்து தலைமுடிவரை ஒவ்வொன்னா பாதிக்கும், அதில்லாம, டயாபட்டீஸ் உள்ளவங்களுக்கு கொலஸ்ட்ராலும் சேர்ந்திருந்தா அது இன்னும் ஆபத்து."

அப்பா அசைந்து கண்திறந்து படுக்கை பிடித்துபடி பேசிக் கொண்டே எழுந்தார்.

"அப்பா!!!" என்று பதறிக் கொண்டு மூன்று மகன்களும் பெரிய மருமகளும் ஓடிப் போய் அவருக்கருகில் அமர, மருத்துவர் அவரை எழுந்திருக்க மறுத்துவிட்டு, அவரை படுக்க வைத்து ஸ்டெதஸ்கோப் வைத்து மார்பில் முதுகில் எல்லாம் சோதித்துப் பார்த்தார். பார்த்துவிட்டு அப்பாவை நோக்கி -

"ஏன் துரை ஐயா வயசான காலத்துல இப்படி கஷ்டப்படுத்துறீங்க பிள்ளைகள?"

"அய்யய்யோ எங்களுக்கு அப்படியெல்லாம் ஒரு கஷ்டமும் இல்ல டாக்டர்."

"நீங்க சும்மா இருங்க சுதர்மன், ம்... நீங்க சொல்லுங்க, வாக்கிங் ஏதும் போறதில்லையா? காலாற ரெண்டு வேளையும் கொஞ்சம் நடக்கறது தானே வீட்டுக்கும் தெருவுக்கும். பொதுவா இதுபோன்ற நோயாளிகளுக்கு நடக்கறதுதான் முதல் மருந்து, அதுக்கப்புறம் தான் மாத்திரையெல்லாம்."

"இனிமே நடந்து என்னங்க செய்ய, சீக்கிரம் போய் சேர்ந்தா பிள்ளைங்களாச்சும் நிம்மதியா இருக்குங்க."

"அப்பா!"

"நீங்க அதலாம் சொல்லாதீங்க துரைசாமி. அவுங்க எவ்வளோ பாசமா இருக்காங்க.. நீங்க கொஞ்சம் கவனமா இருக்க வேணாமா?"

ஆனா, "எல்லாத்தையும் விட இன்னைக்கு நடந்தது தாங்க அதிசயம்" சொல்லிவிட்டு மருத்துவர் மூன்று மகன்களையும் திரும்பத் திரும்ப பார்த்தார்.

பார்த்துவிட்டு "அதுவரையும் அந்த ஒரு மினர் பாயாசத்தை கொடுத்து எப்படியோ இவர் உயிரைக் காப்பாத்துனீங்க, இல்லைன்னா இவ்வளவு நேரமெல்லாம் கஷ்டம்" மருத்துவர் பேசி நிறுத்த சுதர்மன் திரும்பி பிரேமாவை நன்றியுடன் பார்த்தார்.

"நீங்க ஒண்ணு பண்ணுங்க வாரத்துக்கு ஒரு முறை இந்த சுகர் பார்க்குற மெசின் வாங்கி வைத்து வீட்லையாவது சுகர் செக் பண்ணி பாருங்க. இயன்றளவு டயாபட்டீஸ முதல்ல குறைங்க."

"நல்லது டாக்டர்.. அப்படியே செய்றோம். என்று சொல்ல மருத்துவர் வேறு சில மாத்திரைகளையும் எழுதிக் கொடுத்தார்.

வாங்கிக் கொண்டு, எல்லோரும் ஏறி வண்டியில் அமர, சுகுமார் ஸ்கூட்டரில் அவர்களுக்கு முன்பாகப் பறந்தான். அப்பா சுதர்மனின் மடியில் சாய்ந்தவாறு

தொடரும் . . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## ஆனந்த அழுகை

என் மண்ணுள்
இத்தனை
நாட்கள் வாழ்ந்திருந்த
எலும்புக் கூடுகளே!

உங்கள் வரவை
எண்ணிக் காத்திருக்கும்
பாச விழிகளுக்கு
உம்மை
இனங்காட்டவா
வெளிப்பட்டிருக்கிறாய்?

உடலோடு உயிரோடு
உயிர் மேனியாய்
நீ எழுந்திருந்தால்
உனை இனங்கண்டிருப்போம்

இனி என்ன பயன்?
நீ மட்டும் சடலமாய்
உன் உறவுகளை
இனங்கண்டு
ஆனந்தித்து அழுது வடி.

-திருமலை சுந்தா-



## காதலின் வேதனை!

என் ஞாபகங்களை கழற்றி
எறிந்துவிட்டு
வாழ்க்கைப் பாதையில்
நீ
நடக்க முடியாது.
கவனித்துக் கொள்
அவை
உன்னுடைய காற் செருப்புக்கள்
அல்ல
கால்கள்!!!

வ. தமிழ்ச்செல்வன்.
திருகோணமலை

## காதலுக்காக!

அவளை கண்டவுடன்

என் கையில் கட்டியிருந்த
கடிகாரம் கூட
நின்று விடுகின்றது.

அதற்கும் சேர்த்து தான்
அடித்துக் கொள்கிறதே
இதயத்தினுள்
அலாரம்!!!

வ. தமிழ்ச்செல்வன்.
திருகோணமலை

## திருக்கேதீஸ்வர நாதனுக்கு....



அப்பனே.
தேவாரப் புகழ் படைத்த
திருக்கேதீஸ்வர நாதனே.

அன்புடனே உந்தனுக்கோர்
அடியேனின் மடல்.

ஒரு இராத்திரியாவது விழித்திருந்து
உன்னையெண்ணித் தியானித்து
விரதமிருந்துவிட
உனது.

புண்ணியத் தலம் நோக்கிப்
புறப்பட்டுவரத் திட்டமிட்டேன்
ஆனாலும்.

நீ இருக்கும் திசைநோக்கி
தலைவைத்துப்படுத்தாலே
கபாலக் கூடுகள் பலவிதமாய்
கனவில் வந்து
வீராப்பா சிரிப்புதிர்த்து
வெருள வைக்குதையா

அதனால்
அந்த
யாத்திரையை
எண்ணியபடி நிறைவேற்றும்
எண்ணத்தை
இடைநடுவில் விட்டுவிட்டேன்.

புதைந்து போனவர்களைக் கைவிட்டு
புரியாத மோனத்தில்
மூழ்கிக் கிடக்கும் அப்பனே கேதீஸ்வரா
என்னையும் கைவிடாது
என்றென்றும் காப்பாற்று
சிவ...சிவா...!

உனது பக்தன்
செல்லிதாசன்

# பழமையும் புதுமையும்

க.கைலாசபதி



கடந்த சில காலமாக எமது இலக்கிய உலகிலே பல விதமான வாதப் பிரதி வாதங்களும், கருத்து மோதல்களும் காணப்படுகின்றன. இவை இயக்கத்தின் இனங்காட்டிகள். வளர்ச்சியின் அறிகுறிகள் ஆயினும் எந்த மோதலையும் போல இங்கும் குழப்பம் விளைந்துள்ளது. குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்ளும் நிலை ஏற்படும் ஆபத்தும் தோன்றியுள்ளது. எனவே இன்றைய இலக்கிய நிலையை சற்று நிதானமாக நோக்குவது பயன்தரும் செயலாகும்.

மூன்று பொருள் பற்றியன

எம்மிடையே கேட்கும் குரல்கள், உரத்த குரல்கள் மூன்று பொருள் பற்றியன.

1. பண்டைய இலக்கியம்
2. புதிய இலக்கியம்
3. இலக்கியமும், அரசியலும்

இவை மூன்றும் ஒன்றுக்கொன்று விரோதமானவை என்ற அடிப்படையிலேயே வாதப்பிரதிவாதங்கள் நடந்துள்ளன. நடைபெறுகின்றன. மூன்று பொருள் பற்றியும் பலர் உணர்ச்சிவசப்பட்டு வாய்க்கு வந்தபடியெல்லாம் ஏசிப் பேசி உள்ளனர்.

பண்டைய இலக்கியங்களை நன்கு படித்தவர்கள் எந்தச் சமுதாயத்திலும் வெகு சிலரே. எனினும் காலத்தின் மதிப்புடன் நிலவுவனவாகையால், அவை பவித்திரமானவை எனும் நம்பிக்கை இயற்கையாகப் பலரிடம் குடிகொண்டுள்ளது. பெரும்பாலானோரைப் பொறுத்தவரையில் இது வெறும் மூட நம்பிக்கையே என்பதில் ஐயமில்லை. ஆயினும் நம்பிக்கை நம்பிக்கைதான். அதன் சக்தியை நாம் மறந்துவிடலாகாது. அதுமட்டுமன்று எமது பழைய இலக்கியங்களிற் பெரும்பாலானவை நிலப்பிரபுத்துவ, முடியரசுக்காலச் சமூக அமைப்பின் நிழலிலே தோன்றியவை. சைவ சமயக் கோட்பாடுகளுடன் பின்னிப் பிணைந்தவை. ஏற்றத்தாழ்வு நிறைந்த சமூகஉறவுக் கருத்துக்களைத் துணையாகக் கொண்டவை. இவை அழுக்குப்பிடியுடன் ஒட்டிக்கிடப்பன. தாமே இலகுவில் மாறா. வாழ்க்கை நிலை மாறும் போதுதான் உணர்வும் மாறுகின்றது. பண்டைய இலக்கியங்களையே படிக்கும் வாய்ப்பும், அவை காட்டும் வாழ்க்கை முறையில் பற்றும் கொண்டவர்களைப் பழமை விரும்பிகள் என்பது எளிது. ஆனால் அது பெருமைப்படக்கூடிய விஷயமன்று. கவலைக்குரிய விஷயம். பழமை விரும்பிகள் ஏன் அவ்வாறு தொடர்ந்து இருக்கின்றனர் என்று கேள்வியைத் தொடங்குவது சிறிது பயனள்ள முயற்சியாகும். அதே சமயம் பழமை விரும்பி என்று ஒருவருக்கு பட்டம் சூட்டும் போது, எதிர்ப்பக்கத்தில் நிற்பவர்களும் பழமைக்கும் எத்தகைய தொடர்பும் இல்லையென்னுங் கருத்துத் தொனிக்கிறது. அது சரியா? இல்லை! உண்மையில் ஒருவர் பழமையை விரும்புகிறார் என்பதல்ல முக்கியம். புழைய கலை இலக்கியம் பற்றி தவறான கருத்துக்கள் கொண்டிருக்கிறார். ஆல்லது பழம்பெரும் படைப்புக்களைத் தவறாக விளங்கிக் கொண்டிருக்கிறார் என்பதே மனங்கொள்ள வேண்டியதாகும். அதற்கு பழைய இலக்கியங்களிற் காலத்தாற் சாகாத கருத்துக்கள் எவையெவை என்பதும் மனிதனை வாழ்விக்கும் கருத்துக்கள் எவ்வாறு கூறப்பட்டுள்ளன என்பதும் எமக்குத் தெளிவாயிருத்தல் அத்தியவசியம். பண்டைய இலக்கியங்களெல்லாம் பவித்திரமானவை என்னும் மூட நம்பிக்கையாயின் அதன் மறு தலையும் மூட நம்பிக்கையேயாகும்.

### பழைய கனவும் புதிய நனவும்

வையத்தில் மனிதருக்கு விடுதலையும், நல்வாழ்வும், சகல விதமான இன்பங்களும் கைவசப்படல் வேண்டும் எனும் கனவு தொன்றுதொட்டே விழையப்பட்டுள்ளது. எமது பண்டைய இலக்கியங்கள் இவ்வுண்மைக்கு விதிவிலக்கல்ல. வரலாற்றுப் போக்கிலே எமது இலக்கியத்தில் முற்போக்கான புரட்சிகரமான மக்களையளவளாவிய சனநாயகக் கருத்துக்கள் ஏன் தோன்றின என்றும், எப்படித் தோன்றின என்றும் பின்னர் எவ்வாறு வலுவிழந்தன என்றும் தெள்ளத்தெளிவாக உணர்வது இலக்கிய ஆசிரியனுக்கு இன்றியமையாதது.

ஒவ்வொரு காலப்பகுதியிலும் ஆட்சி பீடத்திலிருக்கும் ஆளும் வர்க்கம் மனிதனின் உணர்வையும், சிந்தனையையும் தனது எதேச்சாதிகாரத்திற்கு ஏற்ப பயன்படுத்த முனைகிறது. புரட்சிகரமான உணர்வுகளை வளைத்தும், சுளித்தும், திசை திருப்பியும் முடியுமாயின் அடக்கியும் வழிநடத்துகின்றது. ஆனால் இம்முயற்சிகளையெல்லாம் உதறித் தள்ளிக்கொண்டு நசுக்கப்படும் மக்கள் முன்னேறுகின்றார்கள். ஆவர்க்ளின் இதயச்சுமையும், உடல் வருத்தமும் சிலரின் இலக்கிய வாயிலாகக் கனிகிறது. வணிக வர்க்கத்தின் பிடியிற் சிக்கி பிறமொழி, பர சமயம் ஆகியவற்றைப் பின்பற்றிப் பொது மக்களின் நல்வாழ்வைக் கவனியாத பல்லவ மன்னனின் கட்டளையை உதாசீனஞ் செய்து ''யாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்'' என்று புரட்சிக் குரல் எழுப்பி அப்பர் தனது காலத்து முற்போக்கான அணியில் நின்றவரே யாவர். வரலாற்று வளர்ச்சியில் சதா காணப்படும் இது போன்ற எண்ணற்ற முரண்பாடுகள் எல்லாம் வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையிலேயே தோன்றுவனவே. இப்போராட்டமே வரலாற்றை இயக்கும் சக்தியாகும் இந்நிலையில் பழைய இலக்கியங்களைத் தள்ளி வைத்தால் காலூன்ற இடமின்றி ஆகாயத்தில் மிதப்பவராகி விடுவோம். முதலாளித்துவ தத்துவவாதிகளும், அறிஞர்களும் பழம் பெருமையைக் கூண்டிலடைத்து வைத்துக் காட்டுபவர்கள் என்று ஓரிடத்தில் ஸ்டாலின் கூறியுள்ளார்.

தொடரும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயனுக்கு நேர்ந்தது?!



செகண்ட் இன்னிங்சில் அஜித், ஆர்யா போன்ற நடிகர்களுடன் நடித்தபோது நயன்தாரா அவர்களுக்கு பொருத்தமாக இருந்தார். ஆனால், அதற்கடுத்து இப்போது சிம்பு, ஜெயம்ரவி, தனுஷ், உதயநிதி என நடிப்பதால், அவர்களுடன் நின்று நடிக்கும்போது நயன்தாராவின் உடம்பிலும், முகத்திலும் முதிர்ச்சி தெரிகிறதாம்.

அதனால், தனது இளமையை பாதுகாக்கும் உணவுகள், இயற்கை மருத்துவங்களில் கவனத்தை திருப்பியிருக்கும் நயன்தாரா, முகத்தில் பூசிக்கொள்ளும் மேக்கப் பொருட்களை முகத்தை பாதிக்காத வகையிலான பிராண்டுகளை பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார். கூடவே, மேக்கப்பை கலைத்ததும் முதல் வேலையாக ஸ்கின்னை பாதுகாக்கக்கூடிய சில ஆயுர்வேத கிரீம்களை போட்டுக்கொள்கிறாராம்.

அதோடு, வீட்டில் இருக்கும் பெரும்பாலான நேரங்களில் முகத்தில் எதையாவது பூசிக்கொண்டேயிருக்கிறார். யாராவது சினிமாக்காரர்கள் பட விசயமாக சந்திக்க சென்றாலும், தனது நிஜமுகத்தை காண்பிக்காமல், ஆயுர்வேத கிரீம் தடவிய முகத்தோடுதான் காட்சி கொடுக்கிறாராம் நயன்தாரா.

# திருமணத்தில் குதிக்கும் பாவனா

சித்திரம் பேசுதடி படத்தின் மூலம் தமிழ் பட உலகுக்கு கதாநாயகியாக அறிமுகமானவர். தமிழ்ப் படங்களில் நடித்த நடிகை பாவனா, கன்னட திரைப்படத் தயாரிப்பாளர் நவீனை காதலித்து திருமணம் செய்யவுள்ளார்.

தமிழில் வாய்ப்பு குறைந்ததால் கன்னட திரைப்படவுலகில் தஞ்சம் புகுந்தார். இப்போது மைத்ரி என்ற திரைப்படத்தில் நடித்து வருகிறார். ஆனால் மலையாளத்தில் நான்கு திரைப்படங்களில் பிஸியாக இருக்கிறார்.

கன்னட திரைப்படங்களில் நடித்து கொண்டிருந்த போது பாவனாவுக்கு, நவீன் என்ற கன்னட திரைப்பட அதிபருக்கும் இடையே காதல் மலர்ந்தது.



பாவனா – நவீன் திருமணம் எதிர்வரும் ஓகஸ்ட் அல்லது செப்டெம்பர் மாதம் நடைபெற இருக்கிறது. திருமணம் கேரளாவில் நடத்துவதா? அல்லது பெங்களூரில் நடத்துவதா? என்பது பற்றி இரு தரப்பினரது பெற்றோர்களும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள்.

# சமந்தா - அர்த்தும்

அஞ்சானில் சூர்யாவுக்கு ஜோடியாக நடிக்கும் இவர், ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கிவரும் படத்தில் விஜய்க்கு ஜோடியாகவும் நடிக்கிறார்.

தற்போது அஞ்சான் படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்து வர, சூர்யாவுடன் அழகான ஒரு பாடல் காட்சியில், பியூட்டி.:.புல்லாக நடித்து முடித்துள்ளார்.

இப் படத்தில் சமந்தாவின் பெயர் ஜீவா. 'அஞ்சான்' படத்திற்கு ஒளிப்பதிவு செய்யும் சந்தோஷ் சிவன் கூட பணியாற்றிவர் மறைந்த ஒளிப்பாதிவாளர் ஜீவா. அவரது நினைவாகத்தான் சமந்தாவுக்கு இதில் ஜீவா என்று பெயர் வைத்திருக்கிறார்களாம். திருப்பதி பிரதர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் அஞ்சான் படத்தை லிங்குசாமி இயக்கி வருகிறார். அத்துடன் சமந்தாவுக்கென்றே



# சினிமுரசு

## சினிமா குறுஞ்செய்திகள்

- மலையாள சினிமாவை மயக்கிய அஜித்

அஜித்தின் படங்கள் வெற்றிபெற்றதனால், தல யை பின்தொடருகிறார்கள் பிரபல மலையாள ஹீரோக்களும். தாங்களும் நரைத்த முடியுடன் ஓரிரு காட்சிகளில் அல்லது படம் முழுவதும் நடிக்க திட்டமிட்டுள்ளனர்.

- சோனாக்ஷி தமிழ் வாய்ப்புக்களை மறுக்கின்றார்

தமிழில் வெளியாகி ஹிந்திக்கு ரீமேக் ஆகி வரும் படங்களில் தொடர்ந்து நடித்துவரும் சோனாக்ஷி தமிழில் நடிக்க மறுத்துவருகின்றார்.



- கார்த்தியுடன் மீண்டும் சேரும் தமன்னா

ரஜினியின் 'மூன்று முகம்' படத்தை ரீமேக் செய்யவுள்ளார் இயக்குனர் விஷ்ணுவர்தன். இதில் பையா, சிறுத்தையில் ஜோடி போட்டு கலக்கிய கார்த்தியும், தமன்னாவும் மீண்டும் சேரவுள்ளனர்.

- அஜித் - அனுஷ்கா ஜோடி சிக்கலில்

கௌதம் மேனன் இயக்கும் இப்படத்தில் தான் ஸ்லிம்மாக இருக்க வேண்டும் என்பதற்காக தல ஜிம்மிலேயே காலத்தைக் கழிக்கின்றார். அவருடன் ஜோடியாக அனுஷ்கா நடிக்கவிருப்பதாக தகவல்கள் வெளியாகின. ஆனாலும் தல படத்தில் அவர் இளமையாக தெரியவேண்டும் என்பதால் ஜோடிக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

- தளபதி தந்தையுடன் மோதல்

தன்னை அரசியலில் ஈடுபடுத்த தந்தை விரும்புவதால் தான் தன் படங்களுக்கு தேவையில்லாத பிரச்சனைகள் வருவதாகவும், இனிமேல் எந்தவொரு நிகழ்வுகளிலும் தந்தையின் பெயரை போஸ்டர்களில் போடவேண்டாம் என விஜய் மக்கள் இயக்க தலைவர்களுடன் நடத்திய ரகசிய கூட்டத்தில் அதிரடியாக அறிவித்துள்ளார்.

# விஷாலின் 'மதகஜராஜா'

ஒரு வழியாக விஷாலின் மதகஜராஜா படம் ரிலீசுக்கு தயாராகிவிட்டது. சுந்தர்.சி. இயக்கத்தில், விஷால், அஞ்சலி, வரலட்சுமி சரத்குமார், சோனு சூட் முதலானோர் நடித்துள்ள படம் 'மதகஜராஜா'. ஜெமினி .:.பிலிம் சர்க்யூட் நிறுவனம் தயாரித்துள்ள இப்படம் பலமுறை ரிலீஸ் திகதி அறிவிக்கப்பட்டு, ஒரு சில பிரச்சனைகளால் படம் ரிலீசாகவில்லை.

இப்படத்தை அடுத்த மாதம் மார்ச் 7ம் திகதி ரிலீஸ் செய்யவிருக்கிறார்கள். இந்தப் படத்திற்கு விஜய் ஆன்டனி இசை அமைத்திருக்க, ரிச்சர்ட் எம்.நாதன் ஒளிப்பதிவு செய்திருக்கிறார். சுந்தர்.சி. இயக்கத்தில் வி'ால் நடித்திருக்கும் முதல் படம் இது.

# குடும்பத்தில் குழப்பம்

'ரம்மி', 'பண்ணையாரும் பத்மினியும்' என அடுத்தடுத்து இரண்டு படங்கள் விஜய்சேதுபதிக்கு எதிர்பார்த்த அளவிற்கு வரவேற்பை பெற்று தராத நிலையில் அவரை பற்றி ஒரு வதந்தி கோலிவுட்டில் சமீபகாலமாக கோலோச்சி வருகிறது. அதாகப்பட்டது, இந்த இரண்டு படங்களிலும் அவருடன் இணைந்து நடித்த ஐஸ்வர்யாவுடன் நெருக்கமாக இருக்கிறார் விஜய்சேதுபதி!



அதனால் அவரது வீட்டுக்காரம்மா கோபித்துக்கொண்டு தாய் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்னும் வதந்திதான் அது. குடும்பத்துடன் பைக்கில் போய் ரொம்பநாள் ஆச்சு என்பதால் ஹெல்மட் உதவியுடன் இப்படி

# மீண்டும் விமல் - சூரி

விமல்- சூரி மீண்டும் இணைந்து கலக்க வருகிறார்கள், ஒரு ஊர்ல ரெண்டு ராஜா படத்துக்காக. ஆர்.கண்ணன் இந்தப் படத்தை இயக்குகிறார். இப்படத்தின் கதாநாயகியாக பிரியா ஆனந்த் நடிக்கிறார்.

தூத்துக்குடியில் இருந்து சென்னை நோக்கி வரும் இரயிலில் நடக்கும் சம்பவங்களை வைத்து இப்படத்தின் கதையை உருவாக்கியுள்ளார் கண்ணன்.

முதல் பாதி வரை இரயிலிலும், இரண்டாம் பாதி கார் பயணம் என ஆக்ஷன், காமெடி கலந்த பொழுதுபோக்குப் படமாக உருவாகிறது ஒரு ஊர்ல ரெண்டு ராஜா.

# மாற்றம் ஒன்றே மாறாதது



ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் நடிக்கும் விஜய், இதுவரை தான் நடிக்காத புதிய பாணிக்கு மாற்றியிருக்கிறார்.

அந்த வகையில், மங்காத்தா தொடங்கி வீரம் வரைக்கும் சால்ட் அண்ட் பெப்பர் ஹேர் ஸ்டைலில் நடித்து அசத்தியிருந்தார் தல அஜித்.

இதையடுத்து கௌதம்மேனன் இயக்கத்தில் நடிக்கும் படத்தில், தனக்கு சீரியல் கில்லர் கதாபாத்திரம் என்பதால் தனது தோற்றத்தையும், இதுவரை இல்லாத அளவிற்கு தனது ஹேர் ஸ்டைலையும் அதிரடியாக மாற்றி வருகிறார் அஜித்.

இவரைத் தொடர்ந்து ஏ.ஆர்.முருகதாஸ் படத்தில் நடிக்கும் விஜய்யும் தனது ஹேர் ஸ்டைலை இதுவரை தான் நடிக்காத புதிய பாணிக்கு மாற்றியிருக்கிறார். அப்படத்தில் இரண்டு வேடம் என்பதால் அழகிய தமிழ் மகனைப் போன்று சாதாரணமாக இல்லாமல், தன்னை முற்றிலுமாக வேறுபடுத்திக்காட்ட வேண்டும் என்பதற்காக உடற்கட்டு மட்டுமின்றி, ஹேர் ஸ்டைலை அதிக வித்தியாசப் படுத்திக் காட்டுகிறாராம்.

முன்னதாக, பாலிவுட்டில் இருந்து ஒரு ஹேர் டிரஸ்ஸரை வரவைத்து அவர் கொடுத்த சில கருத்துக்களைக் கொண்டு விஜய்யை பக்காவாக மாற்றியிருக்கிறார் முருகதாஸ்.

தற்போது முதல் கெட்டப்பில் நடித்து வரும் விஜய், அடுத்து இன்னொரு கெட்டப்பிற்காகவும் வேறொரு பாணியில் ஹேர் ஸ்டைலை மாற்றி நடிக்கிறாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்களால் இயக்கும் மவுஸ்

கை ரேகை எப்படி ஒவ்வொரு மனிதனுக்கும் வேறுபடுகிறதோ அதே போல் கண்ணில் இருக்கும் கருவிழியும் ஒவ்வொருவருக்கும் வேறு மாதிரி இருக்கும். இதை வைத்து பல நாடுகளுக்கு இமிகிரேஷன் இல்லாமல் உள்ளே செல்ல முடியும் அளவுக்கு இந்த டெக்னாலஜி வளர்ந்துள்ளது.



இது இப்போது மவுஸ் வடிவில் வந்துள்ளது நமது கணனி மற்றும் லேப்டாப்புக்கு இதை பொருத்தினால் இதில் உள்ள மவுஸை நீங்கள் உங்கள் கண் விழி மூலம் பார்த்தால் போதும் கணனி திறப்பது மட்டுமல்ல ஃபேஸ்புக் ஃ டிவிட்டர் போன்ற அத்தனை சோஷியல் மீடியா, வங்கி கணக்குகளும் இனிமேல் பாஸ்வோர்ட் இல்லாமல் திறக்க இயலும். இது எவ்வகை பாஸ்வோர்ட்டையும் உடைக்கும் திறனான சாஃப்ட்வேருக்கு சவால் இந்த மவுஸ்.




### பேரன் பாடசாலை செல்ல இலட்சம் செலவு



சீனாவைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தனது பேரன் பாடசாலைக்கு செல்வதற்காக 5 ஆயிரம் யுவான் (சுமார் ஒரு இலட்சம் ரூபா) செலவில் விலை உயர்ந்த உயர்ரக லம்போகினி காரின் மாதிரி ஒன்றினை உருவாக்கியுள்ளார். குழு என்ற விவசாயியே இந்த மினி லம்போகினியை உருவாக்கியுள்ளார், இவர் சீனாவின் ஹினான் மாகாணத்திலுள்ள ஷெங்சொயூ நகரைச் சேர்ந்தவர்.

6 மாதங்கள் செலவிட்டு தனது வீட்டிலேயே இக்காரினை உருவாக்கியுள்ளா குழு. பின்செல்லும் கியர், முன் பின் கண்ணாடிகள், ஒலி எழுப்பி, இசை கேட்பதற்கான வசதி உட்பட லம்போர்கினியின் வடிவில் லம்போர்கினி சின்னத்துடன் இக்கார் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதில் மணிக்கு 90 கிலோ மீற்றர் வேகத்தில் செல்ல முடியுமாம். இது குறித்து விவசாயி குழு கூறுகையில், "இது எனது பேரனுக்கான ஒரு விளையாட்டுப்பொருள் மட்டுமே. ஆனால் இதில் எனது பேரனை பாடசாலைக்கு ஏற்றி ஓட்டிச்செல்ல முடியும். மின்சாரத்தில் இயக்கும் சைக்கிளை விட இது சிறப்பாக உள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

## கூகுள் குரோம் புதிய வசதியுடன்

இணைய உலாவிகளில் முன்னணி வகிக்கும் கூகுள் குரோம் உலாவியின் வெப் ஸ்டோர்(Web Store) பகுதியில் புதிய வசதி ஒன்றை கூகுள் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இவ்வசதியின் மூலம் இணைய இணைப்பு இல்லாத போதிலும் பயன்படுத்தக்கூடிய பிரயோகப் பொதிகளைத் (Offline Applications) தரவிறக்கம் செய்ய முடியும்.

இவ்வசதியினை பெறுவதற்கு குரோம் வெப் ஸ்டோர் பகுதியினுள் சென்று அங்கு காணப்படும் Collections பகுதியில் இறுதி அம்சமாக அமைந்திருக்கும் Offline Apps என்பதை தெரிவு செய்வதன் மூலம் குறித்த பிரயோகப் பொதிகளைத் தரவிறக்கம் செய்ய முடியும். தவிர கூகுள் வெப் ஸ்டோர் ஆனது மேலும் ஆறு நாடுகளின் மொழியில் செயற்படக்கூடியதாக




## Windows 8 சிகரத்தை எட்டியது.

மைக்ரோசொப்ட் நிறுவனம் மெட்ரோ பயனர் இடைமுகத்துடன் அறிமுகப்படுத்தியிருந்த Windows 8 இயங்குதளமானது தற்போது 200 மில்லியன் கொப்பிகள் விற்பனையாகியுள்ளன.

விண்டோஸ் 7 இயங்குதள விற்பனையை விடவும் மந்தமான வேகத்திலேயே விற்பனை இடம்பெற்ற போதிலும் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் 6 மாதங்களில் 100 மில்லியன் கொப்பிகளையும், அதன் பின்னரான 6 மாதங்களில் 100 மில்லியன் கொப்பிகளையும் விற்பனை செய்துள்ளது.

எனினும் விண்டோஸ் 7 இயங்குதளமானது ஒரு வருட காலப்பகுதியில் 240 மில்லியன் கொப்பிகள் விற்பனையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை தற்போது எதிர்வரும் 2015ம் ஆண்டில் அறிமுகம் செய்வதற்காக விண்டோஸ் 9 இயங்குதள வடிவமைப்பில் மைக்ரோசொப்ட் நிறுவனம் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது.




பாகம் 2

எதிர்வரும் வாரம் தொடக்கம்

## எப்போதும் மகிழ்ச்சியாக இருப்போம்

இன்றைய நவீன நாகரிக உலகில் நான் நன்றாக வாழ வேண்டும் என்பதற்காக எப்படியும் வாழ வேண்டும் என்று தம் வாழ்வை மேம்படுத்தி, மேலோங்க எண்ணுபவர்களே ஏராளம்.. ஏராளம் -செல்வச் செழிப்பு நிறைந்த வாழ்க்கை வசதிகளை எவ்வழிகளிலாவது அடைந்து மட்டற்ற மகிழ்ச்சியில் வாழ்ந்து நிறைவு காண விளையும் மானிடரின் பெருக்கமே அதிகம் எனலாம்.

இவை எல்லாம் நிரந்தரமானவையா? நிம்மதி தரக்கூடியவையா? என்றோ ஒரு நாள் நிர்மூலமாகக்கூடியவை என்பதை உணர மறுக்கும் மானிட சமூகம் என்றுதான் மறுரூபமாகி மனுவுரு எடுக்குமோ? விழிப்புணர்வு ஏற்பட்டால் விடிவு நிச்சயம் வந்தே தீரும். இந்த இன்பம் பொங்கிட மக்கள் வாழ்வில் அன்பு, அமைதி, அடக்கம், திருப்தி, மன்னிப்பு, பொறுமை போன்ற மானிடப் பண்புகள் மலர்ந்திட வேண்டும்.

எமக்குள் மகிழ்ச்சியை வைத்துக் கொண்டு நாம் எங்கும் அதைத் தேடல் மடமையான செயல். தேவையற்ற விடயங்களைத் தவிர்த்து நாம் மகிழ்வுடன் வாழ்வதோடு மற்றவர்களையும் மகிழ்வுடன் வாழ வழி செய்வதே மகத்தான செயல்.

தாழ்வு மனப்பான்மையும் தற்பெருமையும் மனமகிழ்வைக் கெடுக்காது, மன அமைதியைக் கெடுத்திடும். வெறுப்பு, சந்தேகம் இரண்டையும் சுத்தமாக ஒதுக்கித் தள்ளி தெளிவான மனநிலையடன் இருந்தால் இன்பம் இதயமதில் ஊற்றெடுக்கும்.இறந்த காலத் தோல்விகள், தவறுகளை மனதில் வைத்துக் கொள்ளாது, நிகழ்காலம், வருங்காலத்தை நினைத்துத் தூர நோக்குடன் வாழ்க்கையைச் செலுத்தினால், மனநிறைவு என்றும் ஏற்படும். தனக்காக என்று எதையும் அதிகமாக எதிர்பார்க்காது இருப்பதுடன், தன்னலவாதிகளாயில்லாமல் பொது நலத்தையும் கவனிக்க வேண்டும்.

எத்தனையோ கோடி வாழ்க்கை வசதிகளிருந்தும், அவற்றை அனுபவித்து, இன்ப வெள்ளத்தில் ஆழ முடியாதவர்களும் இல்லாமல் இல்லை. துன்பச் சுமைகளையும், மனச்சோர்வுகளையும், உள்ளத்தின் ஆழத்திலே இருத்தி, ஊமைகளாக உருமாறி இன்பத்தையே தொலைத்து நிற்பவர்களும் இன்று இருக்கத்தான் செய்கின்றார்கள்.

சவால்களைச் சமாளிக்கவும், சுமைகளைச் சுகங்களாக்கியும் வாழ்வதுடன், அவற்றை மனதில் போட்டு நினைத்து வருந்துவதைத் தவிர்த்தால் வாழ்வு இன்பமாகிடும். நிம்மதியான. நிலையான வாழ்வை நீதி, நேர்மை, உண்மைத்தனத்துடன் நடந்தால் நிரந்தரமாக அனுபவிக்க முடியும்.

களிப்பு நிறைந்த கனிவான வாழ்வுக்கு நாம் ஒவ்வொருவரும் நம் ஆசைகள், அபிலாசைகளுக்கு எல்லை வகுக்க வேண்டிய அவசியமேற்படுகின்றது.

ஆண்டவனின் அற்புதப் படைப்பான மனிதன் தன்னையறிந்து, தன்னிடமுள்ள குறை நிறைகளை அறிந்து, குறைகளை நீக்கி, நிறைகளை மேலும் விருத்தி செய்வதன் மூலம் மகிழ்வுடன் வாழமுடியும்.

உலகியல் தேவைகளை மட்டும் கருத்திற் கொள்ளாது, ஆன்மீகத் தேவைகளுக்கும் முன்னுரிமை கொடுத்து, செபதப முயற்சிகளில் ஈடுபட்டு, விலை மதிக்க முடியாத பெறுமதி வாய்ந்த மனித விழுமியங்களைப் பின்பற்றி, நல்ல செயற்பாடுகளுக்கு இடமளித்து வாழும் வேளையில் பசுமை நிறை மகிழ்ச்சிகரமான வாழ்வைச் சுவைக்கலாம்.

"நல்லதைப் பற்றிக் கொள்ளுங்கள். எல்லா வகையான தீமைகளையும் விட்டு விடுங்கள்".

திருமதி. ஜெயவதனி மரியதாஸ்
தி/ சென்.சேவியர் மகா வித்தியாலயம்.
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மட் - உப்போடை விவேகானந்தா மகளிர் வித்தியாலய விளையாட்டுப் போட்டிகள்



மட்டக்களப்பு கல்லடி உப்போடை விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வுகளும் பரிசளிப்பு வைபவமும் இன்று (13) பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திருமதி திலகவதி ஹரிதாஸ் தலைமையில் பாடசாலை விளையாட்டரங்கில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் எம். உதயகுமார் அதிதியாக கலந்துகொண்ட நிகழ்வில் , சித்தி விநாயகர் ஸ்ரீ போச்சியம்மன் ஆலய பரிபாலன சபைத் தலைவர் தி.ஸ்ரீஸ்கந்தராஜா



வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிவைப்பதையும், ஏனைய அதிதிகளும் , பழைய மாணவர்களும் கலந்து சிறப்பிப்பதையும் படங்களில் காணலாம்.

# விக்நேஸ்வராவின் விளையாட்டுப் போட்டி

கதிரவன்

திருகோர்ணமலை விக்நேஸ்வரா மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி வியாழக்கிழமை 20.02.2014 நடைபெற்றது. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் திருமதி இ.முரளிதரன்






தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொருளாதார அபிவிரத்தி பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே பிரதம அதிதியாகவும், வலயக் கல்வி பணிப்பாளர் ந.வஜேந்திரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.




# பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டி

ஹேபட்-சூசை ஞாபகார்த்த, பாடசாலைகளுக்கான காற்பந்துப் போட்டிக்கான ஆயத்த நிகழ்வுகள் 14.02.2014 அன்று புனித சூசையப்பர் கல்லூரியில் நடைபெற்றது.

இச்சுற்றுப் போட்டியானது செலிங்கோ லைப் காப்புறுதி நிறுவனத்தினரின் அனுசரனையுடன் புனித சூசையப்பர் கல்லூரியினதும், திருகோணமலை காவல் துறையினரினதும் ஏற்பாடுகளுடன் நடைபெறுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்போட்டிக்கான ஏற்பாட்டு திட்டங்களும், அனுசரனைப் பணம் கையளிக்கும் நிகழ்வும் கடந்த 14.02.2014 அன்று காலை 10 மணியளவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் புனித சூசையப்பர் கல்லூரியி அதிபர், பிரதிப் பொலீஸ் மா அதிபர் கபில மற்றும் செலிங்கோ மாவட்ட முகாமையாளர்களும், அலுவலகர்களும், முன்னைய காற்பந்தாட்ட வீரர் கிலமன்ட் சில்வா அவர்களும் கலந்து கொண்டார்கள்.


இதன்போது, போட்டி நிகழ்விற்கான மைதானம், ஆரம்ப நிகழ்வு, தங்குமிட வசதி, போக்குவரத்து ஆயத்தம், விளம்பரப்படுத்தல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டு, இப்போட்டியானது எதிர்வரும் 1ம், 2ம் திகதிகளில் நடாத்துவதற்கும் முடிவு எடுக்கப்பட்டது.

-இவன் கனி-




# ஜெயம் பாலகம்

## குறுக்கெழுத்து புதிர் 006



### இடமிருந்து வலமாக

1. கவிச்சக்கரவர்த்தியின் மகன்
3. திருப்பதி ஆலயத்தில் பக்தர்களுக்கு தரப்படும் பிரசாதம் (குழம்பியுள்ளது)
4. 'பாவாடை ………… இல் பார்த்த உருவமோ' விடுபட்ட பாடல் வரி.
5. இது ஏற்பட்டால் பிளவு தான் ஏற்படும்.
8. வறுமையை இவ்வாறும் கூறுவர். (குழம்பியுள்ளது)
9. மகாபாரதத்தில் கிருஷ்ணன் குடையாக தூக்கிப் பிடித்த மலை
11. உறுதியான பொருள் கூறும் கதை தொடர் (திரும்பியுள்ளது)
14. அரசாங்கம் செய்யும் விளம்பரத்தை இவ்வாறு அழைப்பர்.
18. கருமேகத்தை இவ்வாறும் கூறுவர்.
19. மின்னல் இதன் ஒத்த கருத்து பொருள்

### மேலிருந்து கீழாக

1. தமிழில் கலைக்களஞ்சியம் அடிப்படையில் அமைந்த நூல்
2. உறுதி ஒத்த கருத்து பொருள் (குழம்பியுள்ளது)
3. மகளிர் அணியும் ஆபரணங்களில் ஒன்று (தலைகீழானது)
5. சிலப்பதிகாரத்தின் பெயர்களில் ஒன்று (குழம்பியுள்ளது)
6. வாயகன்ற பாத்திரத்தை இவ்வாறும் அழைப்பர். (குழம்பியுள்ளது)
7. ஜான்சி ராணியின் இயற்பெயர்
10. நெல் குற்றும் இடம் (தலைகீழாக)
12. ஆண்சிங்கத்தின் அழகு இம் முடியாகும் (தலைகீழாக)
13. இராசிகளில் ஒன்று (குழம்பியுள்ளது)
15. பிரபல பாலிவூட் ஹீரோயின்
16. இவர்களும் தவறிழைப்பார்கள் (தலைகீழ்)
17. இதில் எல்லாம் சிலை செய்தான் பல்லவராஜன் (தலைகீழாக)
20. மன அமைதியின் எதிரி (தலைகீழாக)

## குறுக்கெழுத்து புதிர் 005 ற்கான விடைகள்

### இடமிருந்து வலமாக

1. இராவணன் வெட்டு
5. திட்டாணி
6. திவிநெகும
7. கத்தார்
9. காத்தவராயன்
11. மம்தா
13. தில்
14. தனம்
16. மடல்
18. திருமந்திரம்

### மேலிருந்து கீழாக

1. இந்தியர்
2. கூன்
3. நெட்டு
4. பாரதிதாசன்
6. மலைத்தல்
8. கங்காணி
10. தாரம்
11. மத்தள
12. ருத்திரன்
15. திராவிடம்
17. மரம்

**போட்டி முடிவுத் திகதி : 28.02.2014**

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 250, ரூபா 150, ரூபா 100 பெறுமதியான கொள்வன்வு கூப்பன் வழங்கப்படும்.
- இப்போட்டியில் ஜெயம் பாலகம், மலைமுரசு ஊழியர்களும் அவர்களின் நெருங்கிய உறவினர்களும் பங்குபற்ற முடியாது.

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :**
**ஜெயம் குறுக்கெழுத்துப் போட்டி. இல — 006**
**32, இராஜவரோதயம் வீதி, திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவாவை எதிர்கொள்ளல்

அண்மையில் லண்டனில் வசிக்கும் சமூகச் செயற்பாட்டாளரான ஒரு நண்பர் கேட்டார். தமிழ்நாட்டிலுள்ள தீவிர தமிழ்த்தேசிய இயக்கங்களும், கட்சிகளும், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக குரல்கொடுக்கும் அதேசமயம், கூட்டமைப்புக்கு எதிராகவும் கருத்துக்களைக் கூறி வருகின்றன. தாய் தளத்தில் துலக்கமான மக்கள் ஆணையைப் பெற்றிருக்கும் ஒரு கட்சியை கடுமையாக விமர்ச்சிப்பதற்குரிய உரிமையை இவர்கள் எப்படிப் பெற்றார்கள்? என்று.... ""அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு" என்று நான் சொன்னேன். ஒன்று கூட்டமைப்பின் கையாலாகாத் தனம் அல்லது அதன் அரை இணக்க அரசியல் தொடர்பாக ஏற்பட்ட அதிருப்தி. இரண்டாவது தமிழ் டயஸ்பொறாவிலுள்ள தீவிரமான தரப்புக்களுடனான உறவு. இவை இரண்டின் காரணமாகவும் அவர்கள் கூட்டமைப்பை விமர்ச்சிப்பதற்குரிய துணிச்சலைப் பெறுகின்றார்கள்.

சில மாதங்களுக்கு முன்பு முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் திறப்பு விழாவில் கலந்துகொண்ட கூட்டமைப்பு உறுப்பினர்களிடம் மேற்படி தமிழ் நாட்டிலுள்ள தீவிர தேசியவாத சக்திகள் தமது அதிருப்தியை வெளிப்படையாகத் தெரிவித்திருக்கின்றார்கள். குறிப்பாக மாகாணசபைத் தேர்தலையொட்டி கூட்டமைப்பின் உயர் மட்டம் தெரிவித்திருந்த கருத்துக்களையிட்டு அவர்கள் கடுமையாக ஆட்சேபித்திருக்கிறார்கள்.

இப்பொழுதுள்ள நிலைமைகளின்படி, களம்,டயஸ்பொறா, தமிழகம் ஆகிய மூன்று தளங்களையும் உள்ளடக்கிய பரந்த தமிழ்த் தேசிய அரங்கை எடுத்து நோக்கின், டயஸ்பொறாவிலும் தமிழகத்திலுமுள்ள தீவிரமான சக்திகள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஆதரிக்கின்றார்கள். மிதமான சக்திகள் ஓரளவிற்கு கூட்டமைப்பை ஆதரிக்கின்றார்கள். அதேசமயம், தாய் தளத்தில் கூட்டமைப்பே மக்கள் ஆணையைப் பெற்ற ஓரே கட்சியாகக் காணப்படுகிறது.

ஏற்கனவே, எனது கட்டுரை ஒன்றில் கூறப்பட்டதைப் போல வடமாகாண சபை உருவாக்கப்பட்ட பின் கூட்டமைப்பின் உயர் பீடம் தனது நிலைப்பாட்டை பகிரங்கமாகவும், கறாராகவும் முன்வைத்து வருகிறது. அண்மையில் இந்தியாவில் வைத்து கூட்டமைப்பின் தலைவர் கருத்துத் தெரிவித்த போது, இந்தியாவில் இருப்பதைப் போன்ற ஒரு சம்'டி அமைப்பையே தாங்கள் கோருவதாக கூறியிருக்கின்றார். அதாவது, வடமாகாண சபை தேர்தலின் பின் பெற்ற மக்கள் ஆணை காரணமாகவும், அந்த மக்கள் ஆணையின் பெயரால் கிடைத்துவரும் ராஜிய அங்கீகாரத்தின் காரணமாகவும் கூட்டமைப்பானது தனது நிலைப்பாடுகளை வெளிப்படையாக முன்வைத்து வருகிறது.

ஆனால், அதேசமயம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது கூட்டமைப்பின் மேற்படி நிலைப்பாடுகளுக்கு எதிராக தனது நிலைப்பாடுகளை முன்வைத்து வருகிறது. கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஒரு ஊடகவியலாளர் சந்திப்பின்போது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது கூட்டமைப்பின் நிலைப்பாடுகளுக்கு எதிரான தனது கருத்துக்களை தெளிவாக முன்வைத்திருந்தது. அதாவது, வடமாகாண சபைக்குப் பின் கூட்டமைப்பு முன்வைத்து வரும் அதன் நிலைப்பாடுகளின் அடிப்படையில் கூறின், கூட்டமைப்புக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையிலான வேறுபாடுகள் கூர்மையடைந்து வருவதையே காணமுடிகின்றது. போர்க் குற்றம் தொடர்பிலும், இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலையா? இல்லையா? என்பது தொடர்பிலும், தமிழர்களுக்கான உச்சபட்ச தீர்வு எது? என்பது தொடர்பிலும் இவ்விரு கட்சிகளும் எதிர் எதிர் நிலைப்பாடுகளோடு காணப்படுகின்றன. அதாவது, இரண்டு கட்சிகளுக்கு மிடையில் இப்பொழுது ஆறு வேறுபாடுகள் அல்ல. அறுபதிற்கும் அதிகமான வேறுபாடுகள் இருப்பது துலக்கமாகத் தெரியத் தொடங்கிவிட்டது. இரண்டு கட்சிகளும் அவற்றின் நிலைப்பாடுகளைப் பொறுத்த வரை துருவ நிலைகளை நோக்கிச் செல்கின்றன.

தீவிர போக்குடைய தேசியவாதிகளும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியலை அப்படியே தொடர முற்படும் தரப்புக்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஆதரிக்கின்றன. அதேசமயம், மிதப் போக்குடைய சக்திகளும் புலி நீக்கம் செய்யப்பட்ட தமிழ்த் தேசியத்தை ஏற்றுக்கொள்ளும் சக்திகளும் கூட்டமைப்பை ஆதரிக்கின்றன. இதில் கூட்டமைப்பிலுள்ள தீவிர நிலைப்பாடுடைய முக்கியஸ்தர்களை டயஸ்பொறா தத்தெடுக்க முயற்சிக்கிறது.

மேற்குநாடுகள் தமிழ் டயஸ்பொறாவுக்கு அதன் சக்திக்கு மீறிய ஒரு முக்கியத்துவத்தை வழங்கி வருவதாகவும் ஒரு அவதானிப்பு உண்டு. இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட டயஸ்பொறா நண்பரும் அதைச் சுட்டிக்காட்டியிருந்தார்.மேற்குநாடுகள் அவற்றின் வியுகத்தேவயின் நிமித்தம் தமிழ் டயஸ்பொறாவுக்கு அதன் சக்திக்கு மீறிய ஒரு முக்கியத்துவத்தை வழங்கி வருவதாகவும் அவர் சொன்னார்.

இத்தகைய ஒரு பின்புலத்தில் டயஸ்பொறாவிலும் தமிழகத்திலும் தீவிர தேசியவாத சக்திகளின் கையே மேலோங்கிக் காணப்படுகின்றது. ஆனால், தாய்த் தளத்தில் கூட்டமைப்புக்கே மக்கள் ஆணை கிடைத்திருக்கின்றது. மேலோட்டமாகப் பார்க்கும்போது இது கூட்டமைப்புக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையிலான முரண்பாட்டையே தமிழகமும், டயஸ்பொறாவும், தாய்த் தளமும் பிரதிபலிப்பது போல ஒரு தோற்றம் உருவாகலாம். ஆனால், இங்கு பிளவுண்டிருப்பது இரண்டு பிரதான கட்சிகள் மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ்ச் சக்திதான்.மெலிந்து காணப்படுவது தமிழ்தேசிய ஐக்கியம் தான். ஜெனிவாவை நெருங்கிச் செல்லும் இந்நாட்களில் தமிழ்ச் சக்தியானது ஆகக்கூடியபட்ச பொதுத் தளமொன்றில் ஒருமுகப்படுத்தப்பட வேண்டும். ஆனால், அரங்கிலுள்ள இரண்டு பிரதான கட்சிகளும் அப்படியொரு பொது நிலைப்பாட்டின் கீழ் ஐக்கியப்பட முடியாதவைகளாகக் காணப்படுகின்றன. எவ்வளவுக்கெவ்வளவு கூட்டமைப்பானது அதன் நிலைப்பாடுகளை வெளிப்படையாக முன்வைக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும், கூட்டமைப்புக்கும் இடையிலான வேறுபாடுகளும் அதிகரித்துச் செல்கின்றன.

இத்தகையதொரு பின்னணியில் தமிழர்கள் ஓரணியாகத் திரண்டு ஜெனிவாவை எதிர்கொள்வது சாத்தியமா? கூட்டமைப்பை தீவிரமாக எதிர்ப்பவர்கள் கூறுகிறார்கள் அப்படியொரு ஐக்கியம் சாத்தியமில்லை மட்டுமல்ல, அது தேவையும் இல்லை என்று. ஏனெனில், கூட்டமைப்பானது தனது சொந்த நிகழ்ச்சி நிரலின்படி செயற்படவில்லை என்றும், அது சக்தி மிக்க அயல் நாட்டின் நிகழ்ச்சி நிரலையே முன்னெடுத்து வருகின்றது என்றும் அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். தனக்குத்தரப்பட்ட மக்கள் ஆணையை திரித்து வியாக்கியானப்படுத்தி வரும் கூட்டமைப்பை இனித் திருத்த முடியாது என்று கூறுமவர்கள், ஒன்றில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பலப்படுத்த வேண்டும் அல்லது மாற்றுக் கட்சியைப் பற்றி யோசிக்க வேண்டும் என்றும் கூறி வருகின்றார்கள்.

கூட்டமைப்பைத் திருத்துவது அல்லது மாற்றுக் கட்சி ஒன்றை உருவாக்குவது என்பவை எல்லாம் நீண்ட காலத் திட்டங்கள். ஆனால், ஜெனிவாவை எதிர்கொள்வது என்பது ஓர் உடனடித் திட்டம். தாய் தளத்தில் மக்கள் ஆணையைப் பெற்ற ஒரு கட்சி எதைக் கூறுகிறதோ அதைத் தான் அனைத்துலக சமூகம் முதலில் கேட்கும். எனவே, அரங்கில் மக்கள் ஆணையைப் பெற்ற ஓரே கட்சியாகக் காணப்படும் கூட்டமைப்பைத் தவிர்த்துவிட்டு ஜெனிவாவை எதிர்கொள்வதற்குரிய ஒரு வியூகத்தை தமிழர்களால் வகுக்க முடியாது.

உடனடியான, குறுங் கால நோக்கிலான ஒரு பொதுவேலைத் திட்டத்தின் கீழ் தமிழ்த் தரப்புக்கள் அனைத்தும் ஒன்றுதிரள வேண்டும். ஜெனிவாவில் தமிழர்கள் ஒரு தரப்பில்லைத்தான். ஆனால், தமிழ்ச் சக்தி ஒரு முகப்படுத்தப்படும்போது அது இப்பொழுது இருப்பதைவிடவும் பலமானதாக பிரமாண்டமானதாக மாறும். அதன் மூலம் இப்போது இருப்பதைவிடவும் அதிகரித்த அளவில் அனைத்துலக அபிப்பிராயத்தை நொதிக்கச் செய்ய முடியும். எனவே, அதற்குரிய ஒரு பொதுவேலைத் திட்டத்தை தமிழ்த் தரப்புக்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து உருவாக்க வேண்டும். முதலில் தமிழர்கள் கறுப்பு வெள்ளையாகச் சிந்திப்பதை நிறுத்தவேண்டும். தங்களுக்கிடையில் ஆகக்கூடிய பட்சம் சாம்பல் நிறப் பொதுப் பரப்புக்களைக் கண்டுபிடிக்க வேண்டும். தங்கள் தங்கள் கட்சியின் அல்லது அமைப்பின் மையத்தை விட்டுக்கொடுக்காமலும் கரையாமலும் பேணிக்கொள்ளும் அதேசமயம், ஓரங்களில் நிபந்தனைகளோடு கரைந்து கொடுக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது, தமிழர்கள் முதலில் தங்களுக்கிடையில் ஒரு பொதுத் தளத்தை உருவாக்கத்தக்க விதத்தில் ஒருவர் மாற்றவரோடு நபெயபந பண்ண வேண்டும். வெளித் தரப்புக்களோடு நபெயபந பண்ணமுதல் தமிழர்கள் தங்களுக்கிடையில் நபெயபந பண்ண வேண்டும். அப்பொழுதுதான் தமிழர்களுக்குப் பொறுப்புக்கூறவல்ல ஒரு கூட்டுத் தலைமை உருவாகும். அரபாத் பலஸ்தீனத்தில் ஒரு கட்டம் வரை இதைச் சாதித்தார். தென்னாபிரிக்காவில் மண்டேலாவும் இதைச் சாதித்தார். இவை தவிர மேலும் இரு உதாரணங்களை இங்கு சுட்டிக்காட்டலாம்.

பலஸ்தீன விடுதலை இயக்கம் ஒன்று யூதப் பயணக் கைதிகளை உகண்டாவின் தலைநகரமான எண்ரபே விமான நிலையத்தில் தடுத்து வைத்திருந்தபோது பணயக் கைதிகளை மீட்பதற்கான ஒரு அதிரடியான படை நடவடிக்கையை பற்றி இஸ்ரேலிய அரசாங்கம் திட்டமிட்டது. இத்திட்டமிடலின்போது அது முதலில் அணுகியது எதிர்க்கட்சிகளைத் தான். அதை ஒரு ஆளும் கட்சியின் திட்டமாக இல்லாமல் ஒட்டுமொத்த யூதர்களின் தேசியத் திட்டமாக முன்னெடுப்பதே இஸ்ரேலிய அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது. கரணம் தப்பினால் மரணம் நிகழ்க்கூடிய ஒரு அதிரடிப் படை நடவடிக்கையானது பிழைக்குமாக இருந்தால் எதிர்க்கட்சிகள் அதை தனக்கு எதிராக திருப்பிவிடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையும் ஆளும் கட்சியிடம் இருந்தது. எதுவாயினும், தமது இனத்தவர்களை மீட்கும் ஒரு படை நடவடிக்கையில் யூதக் கட்சிகள் அனைத்தும் தங்களுக்கிடையில் ஐக்கியப்பட்ட ஒரு முடிவுக்கு வந்தன.

ஜெனிவாவில் தமிழர்கள் எதிர்கொள்வது என்பது பணயக் கைதிகளை மீட்கும் ஒரு படை நடவடிக்கையல்ல. ஆனால், தமிழர்கள் ஒரு தரப்பாக இல்லாத ஓர் அரங்கில் சக்தி மிக்க நாடுகளின் அனைத்துலக வியூகங்களுக்குள் தமிழர்களுடைய அரசியல் பணயக் கைதியாகிவிடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையோடாவது தமிழர்கள் ஐக்கியப்பட வேண்டும். இது முதலாவது உதாரணம்.

இரண்டாவது உதாரணம் தென்னிலங்கையில் உள்ளது. அங்குள்ள பிரதான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஜெனிவாவை எப்படி எதிர்கொள்கிறது? வெற்றிவாதத்திற்கு தலைமை தாங்கும் ஒரு அரசாங்கத்திற்கு முன் தோற்கடிக்கப்பட்ட கட்சியாகக் காணப்படும் ஐ.தே.க.வானது ஜெனிவாவைப் பயன்படுத்தி மேலெழ முயற்சிக்கலாம். அது மேற்கிற்கு விசுவாசமான ஒரு கட்சி. அவர்கள் நினைத்தால் ஜெனிவா அரங்கை அரசாங்கத்திற்கு எதிராக உச்சபட்சமாகப் பயன்படுத்தலாம். ஆனால், அவர்கள் அப்படிச் செய்ய முயற்சிக்கவில்லை. அப்படிச் செய்தால் சாதாரண சிங்களப் பொதுமக்கள் ஐ.தே.க.வை நாட்டைக் காட்டிக்கொடுக்கும் ஒரு கட்சியாகவே பார்ப்பார்கள் என்பது ஒரு காரணம். மற்றொரு காரணம் இது விசயத்தில் அரசாங்கத்திற்கும் ஐ.தே.க.விற்கும் இடையில் ஒருவித தேசிய ஐக்கியம் காணப்படுகிறது. உள்நாட்டில் அவர்கள் அரசாங்கத்தை கடுமையாக விமர்சிக்கிறார்கள். ஆனால், அனைத்துலக அரங்கில் அவர்கள் அரசாங்கத்தைப் பாதுகாக்கவில்லை என்றபோதிலும் பலவீனப்படுத்த முயற்சிக்கவில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

தமிழர்கள் இவற்றிலிருந்து பாடம் கற்கவேண்டும். கடந்த இரண்டு ஆண்டுகளாக ஜெனிவாவை எதிர்கொள்வதைக் குறித்து எந்தவொரு கூட்டுத் திட்டமும் தமிழர்களால் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. இறந்த காலத்திலிருந்து பாடத்தைக் கற்கத் தவறியதன் விளைவே இது எனலாம். இம்முறையும் அந்தத் தவறை தமிழர்கள் விடக்கூடாது. ஆகக் குறைந்த பட்ச நிபந்தனைகளோடு ஆகக் கூடிய பட்ச ஐக்கியம் ஒன்றைக் குறித்து தமிழர்கள் சிந்திக்க வேண்டும் நபெயபநஅநவெ என்று வந்தால் எதையும் கறுப்பு வெள்ளையாகப் பார்க்க முடியாது. கறுப்பு வெள்ளையாகச் சிந்தித்தால் இந்தப்பூமியில் தமிழர்களுக்கு எதிரிகளே அதிகம் இருப்பர். ஜெனிவாவை நெருங்கிச்செல்லும் இந்நாட்களில் ஐக்கியத்தை விட தேசியத்தன்மை மிக்க பெரும் செயல் எதுவுமில்லை.

தேர்தல் காலக் கூட்டுக்களை உருவாக்குவது போல குறைந்த பட்சம் ஜெனிவாக் காலக் கூட்டுக்களை யாவது உருவாக்குவதன் மூலம் தான் தமிழர்கள் ஜெனிவாவை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும்.

**-நிலாந்தன்-**

**நன்றி - குளொபல் தமிழ்ச் செய்திகள்**

# க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

பயிற்சி 07 பாடம் -

1. சுருக்குக. $18.24 + 4.214$
2. தீர்க்க $2x - 1 = 9$

3. 10 புத்தகங்களின் விலை m ரூபா எனின், ஒரு புத்தகத்தின் விலையைக் காண்க.

4. சுருக்குக. $(-3) + (-10) - (-5)$
5. சுருக்குக. $5x/10 - 2x/20$

6. $X < -2$ சமனிலியை எண்கோட்டில் குறித்துக் காட்டுக.

7. 1.031l ஐ ml இல் தருக.

8. $\sum = \{1, 2, 3, 4, 5\}, A = \{3, 5\}$ எனின், ஐக் காண்க.

9. $\text{Log}_2 1024$ இன் பெறுமானம் காண்க.

10. 5 ஐ முழுமைச் சேடாகத் தருக.
11. செவ்வகத்தின் நீளம் 8 cm. அதன் மூலைவிட்டம் 10cm எனின், அகலத்தைக் காண்க.

12. தீர்க்க. $5^{2x-1} = 125$
13. (5, 0) (0, -1) என்னும் புள்ளிகளினூடாக செல்லும் நேர்கோட்டின்
    அ. படித்திறன் யாது?
    ஆ. சமன்பாடு யாது?

14. காரணிப்படுத்துக. $2x^2 - 8$

15. இரண்டு எண்களின் கூட்டல் இடை 15. அவற்றுள் ஒரு எண் 12 எனின், மற்றைய எண்ணைக் காண்க.

16. Sin60cos30 + sin30cos60 இன் பெறுமானம் காண்க.

17. மதில் ஒன்றைக் கட்டுவதற்கு 6 மனிதர்களுக்கு 4 நாட்கள் தேவை எனின், அம்மதிலைக் கட்டுவதற்கு 3 மனிதர்களுக்கு எத்தனை நாட்கள் தேவை?

18. எண்தொடரி ஒன்றின் n ஆம் உறுப்பு $5n - 2$ ஆகும்.
    அ. அத் தொடரின் 63 எத்தனையாம் உறுப்பு?
    ஆ. இதன் 14ம் உறுப்பின் பெறுமானம் யாது?
    இ. $(n - 3)$ ஆம் உறுப்பு யாது?

19. 7.8503 இவ் எண்ணை
    அ. கிட்டிய முழு எண்ணிற்கு ஆ. கிட்டிய முதலாம் தசமதானத்திற்கு
    இ. கிட்டிய இரண்டாம் தசமதானத்திற்கு மட்டந்தட்டுக.

20. 5ஆவது சதுர எண்ணிற்கும் 7 ஆவது சதுர எண்ணிற்கும் இடையில் உள்ள வித்தியாசம் யாது?

21. செய்தித்தாள் ஒன்றிலே விளம்பரம் ஒன்றை வெளியிடுவதற்கு முதல் 15 சொற்களுக்கு ரூபா 22.50 உம் அதற்கு கூடுதலான ஒவ்வொரு சொல்லுக்கும் ரூபா 2.50 உம் அறவிடப்படுகின்றன. 20 சொற்களைக் கொண்ட விளம்பரம் ஒன்றை வெளியிடக் கொடுக்க வேண்டிய தொகையை காண்க.

## சென்ற வார விடைகள்

| | |
|---|---|
| 1. 100 செ.மீ | 2. 315 |
| 3. x (1-x) (1+x) | 4. 1-x |
| 5. $(x + 2)^2 (x + 3) (x - 3)$ | 6. C = -1 |
| 7. y/x | 8. 195 |
| 9. $a^4 b^2/9$ | |
| 10. 98 பாகை | 11. -1/5 |
| 12. -x -y -7z | 13. $X^2 + 8x + 16$ |
| 14. x = 6, x = -14 | |
| 15. 60cm | 16. 50.4664 |
| 17. அ. ரூ 360 ஆ. 30வீதம் இ. ரூ 2160 | |
| 18. 8.07 x | |
| 19. அ. சாய்வுமானி இ. வெளிச்சவீட்டிலிருந்து வள்ளத்துக்கான தூரம் 250மீ | |

கணிதம் வழிகாட்டல் -
திருமலையின் பிரபல ஆசிரியர் T.குமணன்

MATHS
Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
T. Kumanan 0772975953
23. Sivan st Trinco.
G.C.E (O/L) பிரதி சனி தோறும் பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெறலாம்.

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சைக்கான பயிற்சிகள் – 02

பாடம் – வரலாறு

1. இலங்கையின் பெயரளவு ஜனாதிபதி முறைமை நீக்கப்பட்ட ஆண்டு
   1. 1947 2. 1972 3. 1998 4. 1978

2. இரண்டாம் உலக மகாயுத்தத்துக்கு உடனடிக்காரணமான ஜேர்மனியின் படையெடுப்பு இடம்பெற்ற நாடு
   1. ரஸ்யா 2. அமெரிக்கா 3. பிரித்தானியா 4. போலந்து

3. இலங்கையில் லம்பகர்ண வம்சத்தை தோற்றுவித்தவர்
   1. வசபன் 2. மகாசேனன் 3. தாதுசேனன் 4. 1ம் விஜயபாகு

4. இந்தியாவில் முஸ்லீம்களுக்கு தனிநாடு வேண்டும் என முதன்முதலில் பாடியகவிஞன்
   1. அல்லாமா இக்பால் 2. M.C.சித்திலெப்பை
   3. தாதாபாஸ் நபுரோஜி 4. அலிஜின்னா

5. சீனாமுதலாளித்துவபாதையில் செல்வதைதடுக்கமாவேசேதுங முன்னெடுத்தசெயல்திட்டம்
   1. முன்னோக்கிய பெரும் பாய்ச்சல் 2. நீண்டநடைப் பயணம்
   3. கலாசாரப்புரட்சி 4. கோமின்டாங் படைஅமைப்பு

6. டொகுகாவாசோகுன்களின் ஆட்சி முடிவுக்கு காரணமாக அமைந்த பிரதா விடயம்
   1. சோகுன்களின் ஆடம்பரவாழ்வு 2. படைப்பலம் பலவீனம்
   3. அமெரிக்காவுடனான வர்த்தக உடன்படிக்கை
   4. சத்சுமா மீதான பிரித்தானிய குண்டுவீச்சு

7. 1 ஆம் உலக மகாயுத்தகாலத்தில் மத்திய ஐரோப்பிய நாடுகளின் நட்பு கூட்டுஅணியில் இணைந்து கொண்டு பின் பிரிந்து சென்று முக்கூட்டு நட்பு அணியில் இணைந்து கொண்ட நாடு
   1. ரஷ்யா 2. ஜேர்மனி 3. ஆஸ்திரியா 4. பிரான்ஸ்

8. 1 ஆம் உலகமகாயுத்தகாலமுடிவில் உலக சமாதானத்தை நிலைநாட்ட உருவாக்கப்பட்ட சர்வதேச சங்கத்தை தோற்றுவிக்க முன்னின்ற தலைவர்
   1. தியோடர் ரூஸ்வெல்ட் 2. பிராங்லின் ரூஸ்வெல்ட்
   3. ஜோசப் ஸ்டாலின் 4. வூட்டோவில்சன்

9. இரண்டாம் உலகமகாயுத்தத்தில் "அச்சுநாடுகளின்" கூட்டணி
   1. ரஷ்யா, யப்பான், ஜேர்மனி 2. பிரான்ஸ், யப்பான், ஜேர்மன
   3. ரஷ்யா, இத்தாலி, ஜேர்மனி 4. இத்தாலி, யப்பான், ஜேர்மனி

10. இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் பிரதான எழுத்து மூலாதாரம்
    1. தீபவம்சம் 2. சூளவம்சம் 3. மகாவம்சம் 4. தாதுவம்சம்

11. திரிபீடகம் தொகுக்கப்பட்டுஎழுத்துவடிவம் பெற்ற இடம்
    1. கல்விகாரை 2. அலுவிகாரை 3. ஜேத்தவனராமய 4. திஸ்ஸமகாராம

12. புவியியலின் அமைப்புக் காரணமாகநிலைபெற்ற இராசதானி
    1. அநுராதபுர 2. பொலநறுவை 3. கண்டி 4. சீதாவாக்கை

13. பின்வருவனவற்றுள் தொல்பொருள் மூலாதாரமாககருதமுடியாதது
    1. அம்பகமுகல்வெட்டு 2. வெஸ்ஸகிரிகல்வெட்டு 3. சமந்தபாஸாதிகாவ 4. கல்பொத்த

14. வல்லிபுர பொற்சாசனம் மூலம் வெளிப்படும் விடயம்
    1. விஜயபாகு காணிகளை பகிர்ந்தளித்தமை
    2. வசபனின் சுரங்கவழி நீர்ப்பாசனம்
    3. வசபமன்னனின் நாகதீப ஆட்சிப் பரம்பல்
    4. மகாசேனனின் நீர்ப்பாசன திட்டப்பணி

15. ஆரியரின் சமூகஅமைப்பில் சத்திரியரால் ஆற்றப்பட்டபணிகளுள் பொருத்தமற்றது
    1. நாட்டின் நிர்வாகத்தை முன்னெடுத்தல்
    2. அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டு மக்களை பாதுகாத்தல்
    3. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
    4. கல்வி கற்பிக்கும் நடவடிக்கையில் ஈடுபடல்

ஆசிரியர் :
த.அகிலன், Dip. in. Tech. (Merit)
புனித மரியாள் கல்லூரி, திருகோணமலைவெற்றிப்படி ஆசிரியர்,
ஆறுதல் நிறுவன வரலாற்றுப் பாட ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதை குழியில்...

இத்தடயப்பொருளைக் கவனமாகப் பொதிசெய்து நீதிமன்றிற்கு ஒப்படைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

திருக்கேதீஸ்வரப் புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டு மனித எச்சங்கள் வெளியே எடுக்கப்பட்ட ஆரம்ப வேளையில் அனுராதபுர சட்ட வைத்திய அதிகாரி "சடலங்களே கிடைத்து வருகின்றனஆனால் தடயங்கள் எவையும் கிடைக்கவில்லை" எனக் குறிப்பிட்டிருந்தது நினைவுகூறத்தக்கது.

## TOEIC பரீட்சைகளை...

காட்டுகின்றன.

தேர்வு அறையில் கண்காணிப்பாளரே அனைத்து கேள்விக்குமான சரியான விடைகளை தேர்வெழுதுவோருக்கு கூறுவது, தேர்வெழுத வரும் மாணவர்களை அருகில் நிற்கவைத்துக்கொண்டு அவருக்கு பதிலாக வேறு ஒருவர் தேர்வை எழுதுவது போன்ற ஏமாற்று வேலைகள் நடப்பதை பிபிசி எடுத்த ரகசிய வீடியோக்கள் காட்டுகின்றன.

பிரிட்டனுக்குள் வந்து படிப்பதற்குரிய மாணவர் விசாக்களை வெளிநாட்டவர் ஏமாற்றிப் பெறுவதற்கு நிறைய முகவர்கள் உதவுகிறார்கள் என்று கேள்விப்பட்டு அவர்களை பின்தொடர்ந்து பனோரமா ஆய்வாளர்கள் ரகசிய வீடியோவை பதிவுசெய்துள்ளனர்.

பிபிசி காட்டுகின்ற ஆதாரங்களைப் பார்க்கும்போது அதிர்ச்சி ஏற்படுகிறது என பிரிட்டி' உள்துறை அமைச்சர் தெரெஸா மே கூறுகிறார்.

முறைகேடுகளை வெளிச்சம் போட்டு காட்டியமைக்காக பிபிசிக்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

மாணவர் விசா நீட்டிப்புக்குத் தேவையான ஆங்கில மொழித் தேர்வுகள் நடத்தப்படுவதை இடைநிறுத்தி வைப்பதாக பிரிட்டி' அரசாங்கம் அறிவித்துள்ளது.

தேர்வுகளை நடத்தி வரும் ஈ டி எஸ் நிறுவனமோ முறைகேடுகளுக்கும் தமக்கும் தொடர்பு இல்லை என்று கூறுகிறது.

தேர்வுக்கு வரும் கண்காணிப்பு அதிகாரிகளை தாம் நியமிக்கவில்லை என அது தெரிவிக்கிறது.

## சிறுவர் வன்புணர்வு - தேரர் கைது



அமன்தொழுவ சீதுவை இடைபபட்ட பிரதேசத்தில் தற்காலிக குடில் ஒன்றை அமைத்து தங்கியிருந்த தேரர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டவராவார்.

அவர் சிறுவர்களைப் பாலியல் அடிமைகளாக வைத்திருந்ததாக சுற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அப்பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் ஏழாம் தரத்தில் கல்வி பயிலும் 12 - 13 வயதுக்கிடைப்பட்ட மாணவர்களாவர். சந்தேக நபர் தான் தங்கியுள்ள இடத்திற்கு பல்வேறு காரணங்களை கூறி சிறுவர்களை அழைத்து செல்லிடத் தொலைபேசி மற்றும் பழங்கள் என்பவற்றை கொடுத்து அந்த சிறுவர்களை பாலியல் துஸ்பிரயோகம் செய்து வந்துள்ளார்.

தேரர் தங்கியுள்ள இடத்திற்கு தற்செயலாகச் சென்ற நபர் ஒருவர் இரு சிறுவர்களும் தேரரும் நிர்வாணமாக இருப்பதை கண்டுள்ளார். பின்னர் இது தொடர்பில் பாடசாலைக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து வகுப்பாசிரியை மாணவர்களை விசாரித்துள்ளார்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவித்த தகவலை தொடர்ந்து சீதுவை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேக நபரை கைது செய்தனர்.

சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர் செய்த போதே, நீதவான் சந்தேக நபரை 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## சாவதைத் தவிர...

பொருளாதாரப் பிரதி அமைச்சரான சுசந்த புஞ்சி நிலமே மற்றும் மீன்பிடி அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததாக அம் மக்கள் தெரிவித்தனர்.

கிழக்கு மாகாண முதல்வரைத் தொடர்பு கொண்ட போது அவ்வாறான தடைகள் எதுவும் இல்லை எனத் தெரிவித்திருந்தாலும் அங்குள்ள மக்கள் மீன்பிடி நடவடிக்கைகளை முன்னெடுக்கமுடியாதிருந்ததாகவும், அத் தடைகளை மீறி கடந்த சில நாட்களுக்கு முன்னர் தாம் விரித்த வலைகளை சம்பூர் கடற்படையினர் அறுத்தெறிந்ததாகவும் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து கட்டுவலை தொழிலில் ஈடுபடும் 47 மீனவர்களும் இணைந்து காவல்துறையில் புகாரொன்றை அளித்துள்ளனர். விடயம் வெளித் தெரியத் தொடங்கியவுடன் திருகோணமலையின் கோட்டை இராணுவ முகாமுக்கு அழைக்கப்பட்ட மீனவப் பிரதிநிதிகளிடம் பேசியுள்ள கட்டளைத் தளபதி இன்று சனிக்கிழமை மாலைக்குள் மீன்பிடிப்பதற்கான அனுமதியை வழங்குவதாகவும் இவ்விடயத்தைப் பெரிது படுத்த வேண்டாம் என்றும் மீனவப் பிரதிநிதிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதுடன் உரிய இடத்திற்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்தும் உள்ளார்.

இன்று முடிவு வராதவிடத்து மீண்டும் சட்ட நடவடிக்கைகளையே முன்னெடுக்க இருப்பதாக மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். எனினும் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தம்மிடம் சல்லிக் காசு கூட இல்லை என்று தெரிவித்த அவர்கள் காரணமின்றி எமது சீவனோபாயத்தில் ஏன்? கடற்படை கைவைக்கின்றது என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## சிவபூசைஎன்ற பெயரில் பெண் வன்புணர்வு

கணவனின் நோயைக் குணப்படுத்துமாறு அவரின் மனைவி மந்திரவாதி ஒருவரின் உதவியை நாடினார். மந்திரவாதியும் நோயாளியைக் குணப்படுத்துவதாகக் கூறி தம்பகல்லை என்ற இடத்தில் வீடொன்றிற்குள் பிரவேசித்தார்.

நோயாளியைக் குணமாக்கும் பூஜையை ஆரம்பிக்கும் முன் காணிக்கை செலுத்த வேண்டுமென்று கூறி நோயாளியின் மனைவியை அறைக்குள் அழைத்துச் சென்று அவரை பாலியல் வல்லுறவிற்குட்படுத்தியுள்ளார்.

அத்துடன் 15 வயது நிரம்பிய யுவதி மற்றும் கர்ப்பிணிப்பெண் ஆகிய இருவரையும் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியுள்ளார். அதன் பின்னர் நோயாளியைக் குணமாக்கும் பூஜை ஆரம்பிக்கப்பட்டது.

அவ்வேளையில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பெண் ஒருவர் தம்பகல்லை காவல் நிலையத்தில் தமக்கேற்பட்ட நிலை குறித்து புகார் செய்துள்ளார்.

இதையடுத்து விரைந்த காவல்துறையினர் மந்திரவாதியைக் கைது செய்தனர். அவர் பல காவல்நிலையங்களால் தேடப்பட்டு வந்தவரென்றும் காவல்துறை தெரிவித்துள்ளது.

## ஊடக சுதந்திரம்...

ஊடக இல்லத்தில் நடைபெற்ற 11வது பொதுக் கூட்டத்தில் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட வடமலை ராஜ்குமார் மேலும் தெரிவித்த போது இவ்வாறு ஊடகவியலாளர்களைக் காவல்துறை தடுத்தமையைப் பற்றி காவல்துறை அத்தியட்சகருக்குக் கடிதம் மூலம் தமது கடுமையான கண்டனத்தைத் தெரிவிக்க இருப்பதாகவும், ஜனநாயகத்தின் சக்திகளாக செயற்படும் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் இவ்வாறு தடைசெய்யப்படுவது ஆரோக்கியமானதல்ல" என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்த கூட்டத்தில் தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டது.

## தமிழ் சிங்கள் மக்களிற்கு...

வழமைபோல் இம்முறையும் மகா சிவராத்திரி தினமாகிய 27ம் திகதி இலங்கையிலும், உலகளாவியரீதியில் நடைபெறவுள்ளது. ,ந்தக் கொடி தினத்தில் சைவ நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளில் நந்திக் கொடியினை ஏற்றியும் தமது இல்லங்களின் முன்பு கொடிகளால் அலங்காரம் செய்தும் எமது சைவஉணர்வுகளை வெளிப்படுத்தும்படி சைவர்களாகிய உங்களை வேண்டுகின்றோம். இக் கொடி தினத்தை ஓர்வெற்றிகரமான முழுமையான சைவர்கள்தினமாக ஆக்குவது ஒவ்வொரு சைவனுடைய கடமையும், காலத்தின் தேவைப்பாடுமாக இருக்கின்றது.

மாசி மாதத்தில் அபரபக்ஷ சதுர்த்தியில் மகா சிவராத்திரி தினத்தன்று விரதமிருந்து சிவனை சிந்தையில்வைத்து பூசிப்பது நன்று விரதங்களில் மேன்மையானது மகாசிவராத்திரிவிரதமாகும். முறைப்படி மகாசிவராத்திரி அன்று விரதத்தை அனுஷ்டிப்பவருக்கு மரணம் சம்பவிக்கும் காலத்தில் எவ்வித வேதனையும் இன்றி இறப்பர் என்பது ஐதிகம். சிவராத்திரி தினத்தன்று தனது உயிரைக் காப்பாற்றுவதற்காக வில்வமரத்தில் ஏறி இரவுமுழுவதும் நித்திரை இன்றி வில்வ இலைகளால் சிவலிங்கத்திற்கு பூசைசெய்த வேடுவனுக்கே பரமசிவனின் பாதாரவிந்தங்களில் சேருவதற்கு பெரும்பேறு கிடைக்கப்பெற்றது என்றால் மகாசிவராத்திரியின் மகிமை வெளிப்படையாகின்றது. இத்தகைய மகாசிவராத்திரி தினத்தில் உலகசைவப்பேரவையினால் சைவக்கொடிதினம் கொண்டடப்படுவதுடன் உங்கள் அனைவரினதும் ஆதரவு கிடைக்கபெறுவது பெரும்பாக்கியமடாகும்

2001ஆம் ஆண்டு தொடக்கம் சைவக்கொடி தினம் மகாசிவராத்திரி அன்று கொண்டாடப்படுவது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எமது நாட்டிலும் உலகளாவியரீதியிலும் எமது புலம்பெயர் இந்து சமூதாயதினரிடையேயும் பிரசித்திபெற்று சைவத்தின் பெருமையை பறைசாற்றிநிற்கின்றது. கடந்தகாலங்களில் இக்கொடிதினம் எமதுபேரவையின் அங்கத்தவர்கள், ஆலயதர்மகர்தா சபையினர், ,ந்து பாடசாலை ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் மற்றும் இந்து நிறுவனங்கள் என்பவற்றின் ஒத்துழைப்புடன் நாட்டின் பலபாகங்களிலும் விமர்சையாக நடைபெற்றமை மெச்சதக்கதாகும். இம்முறையும் இது சிறப்பாக அமைய அனைவரினதும் ஒத்துழைப்புக்களை பேரவை வேண்டிநிற்கின்றது.

இக்கொடி தினத்தில் பெறப்படும் கொடிநிதி எமது நாட்டின் இந்து நிறுவனங்கள், அறநெறிப் பாடசாலைகள் மற்றும் பாதிக்கப்பட்ட ,ந்துமக்கள் அனைவரினதும் மேம்பாட்டிற்காக விசேடமாக வறியமக்களின் கல்விமேம்பாட்டிற்கு செலவுசெய்வதில் பேரவை உறுதியாக உள்ளது என தெரிவித்துள்ளது.

## உவர்மலை கண்ணகை அம்மன் ஆலய தேரோட்டம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குர் ஆனை பொருளறிந்து படித்தல்

திருமறையை சூரத்துல் ∴பாத்திஹாவிலிருந்து சூரத்துன்னாஸ் வரை முழுமையாகப் படித்து அதன் செய்திகளை அறிந்து கொள்ளவேண்டும். அதன் கட்டளைகளுக்கு கட்டுப்படுவது, அது தடுக்கும் செயல்களை விட்டும் விலகிக் கொள்வது. அதில் கூறப்பட்ட சம்பவங்களின் மூலம் படிப்பினை பெறுவது, இவ்வாறு அல்குர்ஆனோடு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது முஸ்லிம்கள் அனைவரின் மீதும் கட்டாயக் கடமையாகும். நபி(ஸல்) அவர்களின் குணநலன்கள் அல்-குர்ஆனாகவே இருந்தது என்று அன்னை ஆயிஷா(ரலி) அவர்கள் கூறியதின் பொருளும் இதுதான்.

எனவே நம்முடைய வாழ்க்கையை முற்றிலும் அல்-குர்ஆனுக்கு கட்டுப்படும் வாழ்க்கையாக அமைத்துக் கொள்ளவேண்டும். அதுவே அல்-குர்ஆன் இறக்கி அருளப்பட்டதின் மகத்தான நோக்கமாகும்.

இந்த நோக்கத்தைப் புரிந்து கொண்ட நபித்தோழர்களும் நபித்தோழியர்களும் அல்-குர்ஆனுக்கு இணங்க தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள். ஒவ்வொரு வசனம் இறங்கும் போதும் அதன் கட்டளைகளுக்கு உடனே கட்டுப்படுபவர்களாக இருந்தனர். இதற்கு வரலாற்றில் எத்தனையோ சான்றுகள் உள்ளன. எனவே நாமும் அல்குர்ஆனைப் படித்து, அதன் அடிப்படையில் செயல்பட்டு ஈருலக வெற்றியைப் பெறுவோமாக!

திருக்குர்ஆன் பொதுமக்களுக்குப் புரியாது என்று கூறுவது தவறான கூற்றாகும். திருக்குர்ஆனின் அர்த்தம் மற்றும் விளக்கங்களை நேரடியாக அறிவதற்கு அரபி மொழியில் புலமை அவசியம் என்பதில் சந்தேகமில்லை.



ஆனால் மொழி பெயர்க்கப்பட்டவற்றைப் படித்து அதில் உள்ள செய்திகளை ஒவ்வொருவரும் அவரவரின் அறிவுக்கு ஏற்றவாறு புரிந்து கொள்ள முடியும். ஒரு நூல் மொழிபெயர்க்கப்படுகிறது என்றால் அந்த மொழியை அறியாதவர்கள் அதனை புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்குத்தான். எனவே குர்ஆனை அதன் மொழிபெயர்ப்பை புரிந்து கொள்ள முடியாதென்பது தவறானதும் அல்லாஹ்வின் வேதவசனங்களுக்கு மாற்றமான கூற்றுமாகும். அல்லாஹ் இதனை 54: 32, 47: 24 வசனங்களின் மூலம் உணர்த்துகிறான்.

நிச்சயமாக இக்குர்ஆனை நன்கு நினைவு படுத்திக்கொள்ளும் பொருட்டே எளிதாக்கி வைத்திருக்கின்றோம் எனவே

தொடரும்

# 'மெஹ்ர்' வலைதளம்

யூ டியூப் வலைதளம் கூகுள் நிறுவனத்திற்குச் சொந்தமானது. இந்த வலைதளத்திற்கு போட்டியாக ஈரான் அரசு 'மெஹ்ர்' எனும் புதிய வீடியோ வலைதளத்தை உருவாக்கியுள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த இயக்குனரால் எடுக்கப்பட்ட முகமது நபிகளையும் முஸ்லிம் மக்களையும் இழிவுபடுத்தி திரைப்படம் ஒன்றை யூ டியூப் வலைதளத்தில் வெளியிட்டதையடுத்து, இந்த படத்தை யூ டியூப் வலைதளத்திலிருந்து நீக்க வேண்டும் என்று கோரிக்கை இஸ்லாமியர்கள் விடுத்தனர். இதனை கூகுள் நிறுவனம் மறுத்தது. இதனையடுத்து அரபு நாடுகளில் யூ டியூப் தடை செய்யப்பட்டு மெஹ்ர் எனும் புதிய வலைதளம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

# இட்டுண்டு இருத்தல்

கடந்த வாரத் தொடர்ச்சி...

நடிப்புப் பிச்சைக்காரர்களோ அல்லது நிஜமான பிச்சைக்காரர்களோ எப்படி இருந்தாலும் அவர்கள் வருவாய் குறைந்தவர்கள் என்பதை மறுக்க முடியாது.

தர்மம் செய்யவென்று சிந்தித்த பின் அவன் உண்மையிலேயே கஷ்டப்படுகின்றானா? இல்லை நடிக்கின்றானா? என்பது அல்லாஹ் கவனிக்க வேண்டிய விடயம்.

இருப்பதை உண்போம் பசிப்பவர் முகம் பார்ப்போம், தர்மம் செய்வோம், நாடி வருவோரை ஆதரிப்போம், எடுப்பார்க்கு கடன் உண்டு, கொடுப்பார்க்கு குறை இல்லை என்னும் நல் வார்த்தைகளை மன நிறைவாகக் கொண்டு பிறருக்கு உதவி செய்து வாழப் பழகிக் கொள்வோம்.

முற்றும்.

- அமரர்.கலைமாமணி திமிலை. மகாலிங்கம் -




# வெயிலைத் தாக்குப்பிடிக்க

- கோடை காலத்தில் எண்ணை பதார்த்தங்கள், காரம் முதலானவற்றை தவிர்க்கவும். சுத்தமான குடிநீரையும் அதிகமாக குடிக்கலாம்.
- குறிப்பாக இரவு படுக்கப் போகும் முன்பு, சோப்பு போட்டு முகத்தை கழுவுவது அவசியம். தினமும் இரண்டு வேளை குளிக்கவும்.
- வேர்க்குருவைப் போக்க சந்தனத்தை பன்னீரில் குழைத்து, வேர்க்குருக்கள் மீது தடவலாம்.



- கரும்புள்ளிகள் மற்றும் பருக்கள் மறைய பப்பாளிப் பழச்சாறை முகத்தில் தடவவும். எக்காரணம் கொண்டும் பருக்களை கிள்ளக் கூடாது. இதனால் பருக்கள் அதிகமாகும்.
- வியர்வை அதிகமாக சுரப்பதால் தோல் வறட்சியை ஏற்படுத்தும். இதற்கு பழச்சாறு, காய்கறிச்சாறு, சூப் மற்றும் குடிநீரை அடிக்கடி குடிக்கவும்.
- தயிர் சாப்பிடுவதனால் தோல் வறட்சி தடுக்கப்படும். உடம்புக்கு புத்துணர்ச்சி கிடைப்பதோடு தோலும் பளபளப்பாக மாறும். கோடை காலத்தில் தயிருடன் உப்பு சேர்த்து மோராக சாப்பிடுவதும் நல்லது.

**தலை முடி நன்கு வளர...தினமும் முருங்கைக்கீரையை சூப் செய்து சாப்பிட்டால் தலை முடி நன்கு செழித்து வளர ஆரம்பிக்கும். நல்ல பலன் கிடைக்கும் (தொடர்ந்து 3 மாதங்கள்) இது அனுபவத்தில் நீங்களும் உணரலாம்.**

# முருங்கைக் கீரை சூப்

*தேவையான பொருட்கள் :*

முருங்கைகீரை - 2 கப், வெண்ணெய் 1 - டீ ஸ்பூன், கோதுமை மா - 1 டீ ஸ்பூன், உப்புத்தூள், மிளகுத்தூள் - சிறிதளவு

*செய்முறை :*

முதலில் 2 டம்ளர் தண்ணீர் சேர்த்து சுத்தம் செய்து வைத்த கீரையை போட்டு 7 நிமிடங்கள் வேகவைத்துகொள்ள வேண்டும். கீரையில் உள்ள சத்து தண்ணீரில் இறங்கி விட்டிருக்கும்.

அதை உடனே எடுத்து வடிகட்டி (இல்லையெனில் சத்துக்கள் திரும்பவும் கீரைக்கே சென்றுவிடும்), தேவைப்பட்டால் வெண்ணை சேர்க்கலாம் சூட்டிலேயே உருகிவிடும். திக்காக வேண்டும் என்று நினைப்பவர்கள் கோதுமை மாவை சிறிது தண்ணீரில் கரைத்து சேர்த்துக் கொள்ளலாம்.(வடிகட்டியபின் இதை சேர்த்து இரண்டு கொதி விட்டு இறக்கவும்) பின்பு மிளகுத்தூள், உப்புத்தூள் சேர்த்து பருக வேண்டும்.

# பெண்கள் கவனிக்க வேண்டியது

நமது உடலில் பல பகுதிகளில் பிசுபிசுப்புத்தன்மை தேவைப்படுகிறது. பெண்களின் பிறப்பு உறுப்பு எப்போதும் ஈரப்பசை மற்றும் வழவழப்புடன் இருக்கவேண்டியதாயிருக்கிறது. அதற்காக இந்த பிசுபிசுப்பான வெள்ளைத் திரவம் சுரக்கிறது. இது, பிறப்பு உறுப்பின் தசைப் பகுதியில் இருந்தும், கருப்பையின் வாய் மற்றும் அதன் உட்சுவர்களில் இருந்தும் சிறிதளவு சுரந்து வருகிறது. இதன் சுரப்பு அதிகமாகிவிடும்போது அதனை வெள்ளைப்படுதல் என்று கூறுகிறோம்.

வயதுக்கு வரப்போகும் பெண்களுக்கும், சமீபத்தில் வயதுக்கு வந்த பெண்களுக்கும், திருமணமான பெண்களுக்கும்தான் அதிக வெள்ளைப்படுதல் ஏற்படும் சரியல்ல. பெண்களின் எல்லாப் பருவத்திலும் இது வரக்கூடும். குறிப்பாக 15 வயது முதல் மாதவிலக்கு இறுதியாக நின்று போகும் காலம் வரை வெள்ளைப்படுதல் இருப்பது வழக்கம். கருப்பையில் நோய் ஏதாவது இருந்தால் மாதவிலக்கு நின்றுபோகும் காலத்திற்குப் பிறகும் வெள்ளைப்படுதல் நீடிக்கும்.



சினைப்பையில் இருந்து சினைமுட்டை வெளியாகி கருப்பைக்கு வரும் காலத்தில், மாதவிலக்கு தொடங்குவதற்கு சில நாட்களுக்கு முன்பும்- பின்பும், கர்ப்பகாலத்திலும் வெள்ளைப்படுதல் அதிகமாக இருக்கும். தாம்பத்ய உறவின் போது பெண்களின் உணர்ச்சி உச்சம் அடையும் நிலையில் சுரப்பு அதிகப்படும்.

நிறம், வாசனை, அளவு போன்றவை மாறுபடுவது அறிகுறியாகும். பிறப்பு உறுப்பில் அரிப்பும் ஏற்படும். உள்ளாடை நனையும் அளவிற்கும், கால்களில் வழியும் அளவிற்கும் இருந்தால் அது உடனடியாக கவனிக்கத்தகுந்த அறிகுறியாகும்.

யோனிக்குழாயில் கிருமித் தொற்று இதற்கு முக்கிய காரணம். ஆண் உறுப்பின் நுனித்தோல், சிறுநீர்துளை, ஆண்மை சுரப்பி ஆகிய இடங்களில் "டிரைக்கோமோனஸ் வெஜைனாலிஸ்" என்ற கிருமிகள் காணப்படுகின்றன. இது ஆண்களிடமிருந்து பெண்களுக்கு தொற்றுகிறது. கிருமிகள் உள்ள ஆண்கள் பயன்படுத்தும் கழிப்பிடம், குளியல் அறை போன்றவைகளை பயன்படுத்தும் திருமணமாகாத

..தொடரும்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூய லூர்து அன்னையின் திருவிழா

பெரிய உப்போடை தூய லூர்து அன்னையின் திருவிழா.

(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் பழம்பெருமை வாய்ந்த கிறிஸ்தவ தேவாலயமாகிய பெரிய உப்போடை தூய லூர்து அன்னை ஆலயத்தின் பெருவிழா கூட்டு திருப்பலியானது கடந்த (16) ஞாயிற்றுக்கிழமை மட் மறைமாவட்ட ஆயர் அதிவந்தனைக்குரிய கலாநிதி பொன்னையா யோசப் ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படுவதனையும், அன்னையின் பெருவிழா திருப்பலியினை சிறப்பித்து

அன்னையின் அருலாசியினைப் பெறுவதற்காக பல்லாயிரக்கணக்கான இறைமக்கள் பல்வேறுபட்ட பிரதேசங்களிலிருந்து வருகைதந்து திருவிழாவில் பங்கேற்றதனையும் படங்களில் காணலாம்.







## ஆலையடிவேம்பில் டெங்கு ஒழிப்புப் பரிசோதனை

(ஆலையடிவேம்பு நிருபர்)



ஆலையடிவேம்பு பிரதேச செயலக வெகுஜனத் தொடர்பு உத்தியோகத்தரும் பிரதேச டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தின இணைப்பாளருமான காசுபதி கிரிஷாந்தன் தலைமையில்அக்கரைப்பற்று-9 ஸ்ரீ தம்மரத்ன சிங்கள வித்தியாலய மைதானம் மற்றும் அக்கரைப்பற்று-8 பிரதேசத்தில் தனியாருக்குச் சொந்தமான காணிகளிலும் பொதுமக்களின் வீடு சார்ந்த சூழல்களிலும் நடாத்தப்பட்ட டெங்கு ஒழிப்பு பரிசோதனைகளின்போது காணிகளும் வடிகான்களும் அப்பிரதேசப் பொதுமக்களின் உதவியுடன் துப்பரவுசெய்யப்பட்டுத் தூய்மைப்படுத்தப்படுவதனையும் நிகழ்வில் உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பொதுமக்களென அனைவரும் கலந்துகொண்டுள்ளமையினையும் படங்களில் காணலாம்.



## சம்மாந்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு தேசிய பரிசு

(எம்.ரீ.எம்.பர்ஹான்)

கல்வி அமைச்சின் அனுசரனையில் டி.எஸ் சேனநாயக்கா வர்த்தக சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட உயர்தர வணிகப்பிரிவு மாணவருக்கான தேசிய மட்ட வணிகத்திட்ட போட்டியில் அகில இலங்கையில் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மஹா வித்தியாலய தேசிய பாடசாலையானது உற்பத்திக்கான வணிகத்திட்டத்துறையில் தேசிய மட்டத்தில் முதலாவது இடத்தை (தங்கவிருது) பெற்று சாதனை படைத்துள்ளது.



இதற்கான விருது வழங்கும் வைபவம் கடந்த 2014.02.12 ம் திகதி பண்டார நாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் போது கௌரவ கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவினால் பாடசாலைக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.



இதனை வழிப்படுத்திய இப்பாடசாலையின் வணிகப்பாட ஆசிரியர் ஏ.ஆர்எம்..அஜ்வத் அலி அவர்களுக்கும், இப்பகுதிக்கான பொறுப்பு அதிபர் ஏ.ஆர்.எம். உவைஸ், பகுதி தலைவர் எஸ்.எம்.சமூன் ஆசிரியர் அவர்களுக்கும், இப்போட்டியில் பங்குபற்றிய மாணவர்களான எஸ்.எம். நிஷாத், எம்.ரி.எம்.மௌத், கே.எம்.எம் ஹஸ்மத், ஏ.எல். ஷபீக், எம்.எம்.எம். ஹஸார்தீன், எம்.பி.எம். பஸ்லான்,எம்.ஏ.எம் றவுபன், ஐ.எல். பாஹீம் அன்வர், எம்.எஸ். பரீட், எம்.பி.எம் ஹஸம் ஆகியோரை பாடசாலை சமூகம் வாழ்த்திப் பாராட்டுகின்றது.

## சமாதான நீதவான்

(கல்லடி நிருபர்)



அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் கார்த்திகேசு கடந்த 13ம் திகதி அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி ஏ.ஜீ.அலேஷ்ராஜ் அவர்களின் முன்னிலையில் கல்முனை நீதி நிர்வாக வலயத்திற்கான ஒரு சமாதான நீதவானாக சந்தியப்பிரமானம் செய்து கொண்டுள்ளார்.

இவர் அம்பாறை மாவட்ட குருகுல ஆதீனத்தின் முதல் மாணாக்கரும் தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவரும் கண்டி பேராதனை பல்கலைக் கழகத்தில் கலைமாணிப் பட்டதாரியும் ஒரு ஊடகவியலாளரும் சிறந்த எழுதாளரும் கவிஞரும் அபிவிருத்தி உத்தியோகத்தருமாவர்.

## மண்முனை வடக்கில் மக்களுக்கு உதவிகள்

(உ.உதயகாந்த்)



மண்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட 48 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுமிருந்து தெரிவுசெய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கு சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினால் பதின்மூன்று இலட்சம் 'ரூபாய் பெறுமதியான உதவு தொகை மற்றும் மாணவர்களுக்கான புலமை பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டது.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.தவராசா தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உதவி திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி மகா சங்க பணிப்பாளர், கருத்திட்ட முகாமையாளர், நான்கு வலயங்களின் வலய முகாமையாளர்கள், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.



இந்நிகழ்வின் போது வி'ே மருத்துவ உதவி தேவையுடைய பன்னிரெண்டு பயனாளிகளுக்கு 'ரூபாய் பத்தாயிரமும், வறிய மாணவர்கள் முப்பது பேருக்கு துவிச்சக்கர வண்டிகள், திரியபியச வீட்டு திருத்த உதவியாக நாற்பதாயிரம் 'ரூபா வீதம் பன்னிரெண்டு பயனாளிகளுக்கும், சுயதொழில் கொடுப்பனவாக பத்தாயிரம் வீதம் பன்னிரெண்டு பயனானிகளுக்கும், உயர்தர கல்வி ஊக்கிவிப்பிற்காக இருபதாயிரமும், வறிய மாணவர்களுக்கான புலமைப்பரிசில் மூவாயிரத்து அறுநூறு 'ரூபா வீதம் அறுபத்தாறு மாணவர்களுக்கும், நாற்பது மாணவர்களுக்கு ஆயிரம் 'ரூபாய் பெறுமதியான பாடசாலை உபகரணங்களும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## – சிறார் வன்புணர்வு – வத்திக்கான் மீது கண்டனம்

ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த பாதிரியார்கள் ஆயிரக்கணக்கான சிறுவர், சிறுமியர்களை பாலியல் ரீதியாக து'பிரயோகம் செய்வதை அனுமதிக்கும் கொள்கைகளை, வத்திக்கான் , தொடர்ந்து கடைப்பிடித்தது என்று ஐ.நா மன்றம் விமர்சித்திருக்கிறது.

சிறார்களின் உரிமைகள் பாதுகாப்புக்கான ஐ.நா மன்றக் குழு, ( சி.ஆர்.சி), சிறார்களைத் து'பிரயோகம் செய்ததாக அறியப்படும் அல்லது சந்தேகிக்கப்படும் பாதிரியார்களை போப் உடனடியாக அகற்றவேண்டும் என்று கூறியிருக்கிறது.

மேலும், ஒரு பாலுறவு, கர்ப்பத்தடை மற்றும் கருச்சிதைவு ஆகிய விடயங்கள் குறித்து வத்திக்கானின் அணுகுமுறைகளையும் அது கடுமையாக விமர்சித்திருக்கிறது.

ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைப் பீடமான வத்திக்கான், ஏற்கனவே , திருச்சபைக்குள் சிறார்கள் துஸ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுக்க குழு ஒன்றை நியமித்திருக்கிறது.

இந்தக் குழுவின் அறிக்கை வத்திக்கானைக் கட்டுப்படுத்தாது. அதன் பரிந்துரைகளை அமல்படுத்தும் அதிகாரங்கள் கொண்ட அமைப்பும் அங்கு இல்லை. எனவே இக்குழு ஒரு கண்துடைப்பிற்காகவே உருவாக்கப்பட்டிருப்பதாக ஐ.நா. விமர்சித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையிலிருந்து இந்திய விமான சேவை?

## முடியாது என்கிறார் அமைச்சர்



திருகோணமலையில் இருந்து இந்தியா நோக்கி நேரடி விமான வேவைகளை ஆரம்பிக்க வேண்டும் என வடக்கு மாகாண சபை பிரேரணையினை நிறைவேற்றியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கான அடிப்படை நடவடிக்கைகள் என மூன்று விடயங்களை பிரேரணைகளாக வடக்கு மாகாண சபை நிறைவேற்றியுள்ளது.

அவற்றுள் பலாலி மற்றும் திருகோணமலை வான்தளங்களில் இருந்து நேரடி விமான சேவைகளை இந்தியா நோக்கி ஆரம்பிப்பது, தலைமன்னாருக்கும் தனுஸ்கோடிக்கும் இடையே சிறு கப்பல் சேவையை மீள ஆரம்பிப்பது மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்தின் செயற்பாடுகளை விருத்தி செய்தல் ஆகியன உள்ளடங்கியுள்ளன.

எனினும் இப் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டவுடனேயே இலங்கையின் மத்திய அரசின் பொது வான்பறப்பு அமைச்சர் பிரியங்கர ஜெயரட்ண அதனை நிராகரித்துள்ளார்.

"அடிப்படை விடயங்களைப் புரிந்து கொள்ளாமல் எடுக்கப்பட்ட தான்தோன்றித்தனமான முடிவு" என அமைச்சர் வான்போக்குவரத்துப் பிரேரணையை பற்றிய தனது கருத்தத்தைத் தெரிவித்துள்ளார்.

இரண்டு சர்வதேச விமான நிலையங்கள் உள்ள நிலையில் சர்வதேச விமானங்களை மேலும் இரண்டு விமான நிலையங்களில் தரையிறங்குமாறு கேட்பது பெரும் நகைப்பிற்கு இடமானதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சேருவிலைக்கு 225 மில்லியன்



பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் திருகோணமலை மாவட்ட அபிவிருத்திகளுக்கு பிரதி அமைச்சர் புஞ்சிநிலமே அவர்களால் பிரதேசச் செயலாளர் பிரிவுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி சேருவிலை பிரதேசத்திற்கு 225 மில்லியன்களும், மூதூர் பிரதேசத்திற்கு 190 மில்லியின்களும், பட்டணமும் சூழலும் பிரதேசத்திற்கு 181 மில்லியன்களும் 2014ம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

## கையூட்டுடன் பயணிக்கும் கிழக்கின் சொகுசுப் பேருந்துகள்

கிழக்கிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணிக்கும் சொகுசுப் பேருந்துகள் கையூட்டுடன் பயணிப்பதாக நம்பத்தகு தகவல்கள் வெளியாகியுள்ளன.

பயண அனுமதிப்பத்திரம் அற்ற பேருந்துகள் நாளாந்தம் சுமார் மூவாயிரம் ரூபாய்களை உரிய அலவலர்களுக்கு வழங்குவதற்காக ஒதுக்கி வைத்துக்கொண்டு பயணிப்பதாக அத் தகவல் தெரிவிக்கின்றது.

பயணத்தின் போது இடை நடுவில் நிறுத்தப்படும் இப்பேருந்துகள் கையூட்டைச் செலுத்திய பின்னர் பயணத்திற்கு அனுமதிக்கப்படுவதாகத் தெரிகின்றது.

இவ்வாறான நடைமுறையொன்று கொழும்பில் இருந்து வடக்கு நோக்கிப் பயணிக்கும் பேருந்துகளுக்கு நிகழ்ந்ததும் அதனை உரிய அதிகாரிகள் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்ததும் குறிப்பிடத்தக்கது.

## TOEIC பரீட்சைகளை இடை நிறுத்தியது பிரித்தானிய அரசு




வெளிநாட்டு மாணவர்கள் பிரிட்டனில் படிப்பதற்குரிய விசாக்களைப் பெறுவதில் நிறுவன ரீதியான ஏமாற்று வேலைகள் நடப்பதாக பிபிசி நடத்திய விசாரணை ஒன்றில் தெரியவந்துள்ளதை அடுத்து, விசா பெறுவதற்காக எழுத வேண்டிய ஆங்கிலப் பரிட்சைகளை பிரிட்டிஷ் அரசாங்கம் தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளது.

மொழி அறிவு பரிட்சைகளை நடத்துவதில் உலகின் மிகப் பெரிய நிறுவனங்களில் ஒன்றான ஈ டி எஸ் நிறுவனம் நடத்திவந்த பரிட்சைகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன.

பிரிட்டனில் TOEIC (Test of English for International Communication) எனப்படும் ஆங்கில மொழித் தேர்வில் நடைபெறும் முறைகேடுகளை பிபிசியின் பனோரமா நிகழ்ச்சியைச் சேர்ந்த புலனாய்வு ஊடகவியலாளர்கள் ரகசியமாக வீடியோ படம் எடுத்து வெளிச்சத்துக்கு கொண்டுவந்துள்ளனர்.

தனியாரால் நடத்தப்பட்டாலும் அரசாங்க அங்கீகாரம்.. பெற்றுள்ள இத்தேர்வுகளை எழுதுவதில் ஏமாற்று வேலைகள் நடப்பதை இந்த வீடியோ படங்கள் 13

## தமிழர் பிரதிநிதிகளைச் சந்திக்கத் தவறும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள்

கிழக்கில் ஐரோப்பிய ஒன்றியத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தித்திட்டங்கள் சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் பற்றி ஆராய்வதற்காக ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் கிழக்கிற்கு வருகைதரவுள்ளார்கள்.

இவ்வருகையின் போது அரச பிரதிநிதிகளையும் கிழக்கின் முதல்வரையும், ஆளுனரையும் மட்டுமே சந்திக்கவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றிய இலங்கைப் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவில் இலங்கை மற்றும் மாலைதீவிற்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் டேவிட் டலி யும் சில சிரேட்ட ஐரோப்பிய ஒன்றிய அங்கத்தவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனினும் இவ்வருகையின் போது எதிர்க்கட்சித் தலைவரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் எவையும் இருப்பதாகத் தெரியவில்லை.

(ஸ்ரீ)




## "சைவக் கொடிதினமாகச் சிவராத்திரி"

### உலக சைவப் பேரவை



(துஜியந்தன்)

மகாசிவராத்திரி தினத்தன்று இடபக்கொடியேற்றி அனுஷ்டிப்போம் என்று மகாசிவராத்திரி தினத்தை சைவக்கொடி தினமாக கொண்டாடிவரும் உலக சைவப்பேரவையின் இலங்கைக் கிளை அறிக்கை விடுத்துள்ளது. இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

சைவக் கொடியாம் இடபக்கொடி தினம்... 13

## உவர்மலை கண்ணகை அம்மன் தேர்

திருகோணமலை உவர்மலையில் தல பரிபாலனம் செய்யும் கண்ணகை அம்பாளின் வருடாந்த இரதோற்சவம் நடந்தேறியுள்ளது. அம்பாள் சர்வ அலங்காரங்களுடன் தேரேற வருகை தரும் கண்கொள்ளாக் காட்சியைக் காண்க.

எஞ்சிய படங்கள் 13

படங்கள் - கதிரவன்



## கல்லோடைக் கரனின் நூல் வெளியீடு

(உ.உதயகாந்த்)

மட்டக்களப்பு கல்லடி - உப்போடை நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகர் , பேச்சியம்மன், நாகதம்பிரான் ஆலயங்களின் "தல வரலாறும் பெருமைகளும்" கூறிநிற்கும் நூலாசிரியர் திரு.முரு.சேமகரனின் (கவிஞர் கல்லோடைக்கரன்) படைப்பில் உருவான கல்லடி - உப்போடை நொச்சிமுனை மான்மியம் எனும் தலைப்பிலான நூல் வெளியீடும், பக்திப்பாடல்கள் அடங்கிய "பக்திப் பாச்சரம்" இசை இறுவட்டு வெளியீடும் கடந்த (15) சனிக்கிழமை பி.ப 4.00 மணியளவில் கல்லடி - உப்போடை துளசி மண்டபத்தில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் தி.ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெற்றது.

நூலாசிரியரினால் முதற்பிரதிகளை அதிதிகளுக்கு வழங்கி வெளியிட்டு வைப்பதைக் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org